பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 32 செவ்வாய்க்கிழமை (16-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:233

# ஓகஸ்ட் 2க்கு முன் பேச்சுப் பற்றி எந்த முடிவும் செய்வதற்கில்லை!

## தம்மைச் சந்தித்த நோர்வேக் குழுவிடம் பாலா தெரிவிப்பு

லண்டன்,ஜூலை16

**நோர்வே அனுசரணைக் குழுவினர் நேற்று லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை அவரது இல்லத்தில் சந்தித்து மூன்று மணிநேரம் பேசினர். தளர்ந்துபோயிருக்கும் சமாதான முயற்சிகளுக்கு புத்துயிர் அளிப்பது பற்றி நீண்டநேரம் ஆராயப்பட்டது. புரிந்துணர்வு உடன்படிக்கையை முற்றாக நிறைவேற்றுவதற்கான ஓகஸ்ட் 2ஆம் திகதி முடியுமுன்னர் பேச்சுக்குச் செல்வது பற்றி தம்மால் தீர்மானிக்க முடியாது என்று பாலசிங்கம் ஒரேயடியாகக் கூறிவிட்டார் என்று அறியவருகிறது.**

நோர்வேயின் பிரதி வெளிநாட்டு அமைச்சர் ஹெல்கிசன், எரிக் சொல்ஹெய்ம், லிசா கோல்ட் அம்மையார் ஆகியோரே அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசினர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும். அதைத்தான் எதிர்பார்த்துக்

(12ஆம் பக்கம் பார்க்க)


## பல்கலை மாணவருக்குப் பிடியாணை!

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்.பல்கலைக்கழக மாணவர் குழுக்களிடையே கடந்த மாதம் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்காத 26 மாணவர்களுக்கு யாழ்.நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

மாணவர் குழுக்களிடையே கடந்தமாதம் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பான வாக்குமூலங்களைப் பெறுவதற்காக அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய மாணவர்களை யாழ்.பொலீஸ் நிலையத்திற்குச் செல்லுமாறும் அவர்களின் பெயர், விவரங்களை மன்றிற்கு அனுப்பிவைக்குமாறும், இம்மாதம் முதலாம் திகதி

(12ஆம் பக்கம் பார்க்க)



தென்மராட்சியில் நேற்று நடந்த பேரணியின்போது எடுக்கப்பட்ட படம்.

## தீவகத்தில் புலிகள் தாக்கப்பட்டது குறித்த விசாரணை இன்று ஆரம்பம்

### சகல தரப்பினரும் சாட்சியம் அளிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை தீவகப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் தயாளன் ஆகியோர் வேலணையில் வைத்துத் தாக்கப்பட்டது தொடர்பான சுயாதீன ஆணைக்குழுவின் முதற்கட்ட விசாரணைகள் இன்று காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் ஆரம்பமாகவுள்ளன.

விசாரணைகளை நடத்துவதற்காக சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் ஏயர் வைஷ் மார்ஷல் ஹரி குணதிலக மற்றும் ஆணைக்குழு உறுப்பினரான ஓய்வுபெற்ற நீதிபதி ஓ.பி.வீரசிங்க ஆகியோர் நேற்று மாலை 6 மணியளவில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். விடுதலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் புறாக்கள் பறக்க ஏ–5வீதியில் மக்கள் பயணம்

மட்டக்களப்பு,ஜூலை16

செங்கலடி - பதுளை பிரதான வீதியான ஏ-5 நேற்று நண்பகல் 12 மணியளவில் சமாதானப் புறாக்கள் பறக்கவிடப்பட்டு மக்கள் போக்குவரத்துக்கு மீண்டும் திறந்துவைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.பி.தென்னக்கோன் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் வே. சண்முகம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

படைத்தரப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் வசந்த டி சில்வா,

(12ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி மக்கள் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,ஜூலை16

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களை விரைவில் நடைமுறைப்படுத்தக்கோரியும்-

ஒப்பந்தத்தை மீறும் வகையில் தென்மராட்சிப் பகுதியில் படையினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைக் கண்டித்தும் -

நேற்று சாவகச்சேரியில் நடத்தப்பட்ட மக்கள் பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

இப்பேரணியில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவைசேனாதிராஜா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி மற்றும் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பேரணி ஆரம்பமானது முதல் முடிவிடம்வரை பேரணியில் கலந்துகொண்ட மக்கள் ஆக்ரோஷமாகக் கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

### கடற்படையின் செயல்களைக் கண்டித்து

## வேலணையில் இன்று வீதி மறிப்புப் போராட்டம்

மண்டைதீவு,ஜூலை16

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்கள் குடியிருப்புகளையும், விவசாய நிலங்களையும் விட்டு படையினரை வெளியேறக் கோரியும் -

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் திறக்கப்பட்ட வீதியை மீண்டும் மூடியதைக் கண்டித்தும் -

வேலணையில் கடற்படையினர் பிரயாணம் செய்யும் வீதிகளில் உள்ள பிரதான சந்திகளில் இன்று மறியல் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

காலை 8 மணி முதல் பிரதான வீதிகளில் அமைந்துள்ள வங்களாவடிச் சந்தி, புளியங்கூடல் சந்தி மற்றும் துறையூர், டிப்போச் சந்தியில் ஒன்றுகூடும் மக்கள் படையினரின் முகாமைச் சுற்றியமைந்த சந்தி வீதிகளில் மறியல்போரில் ஈடுபடுவர்.

நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு விடுதலைப் புலிகள் அழைப்பு

### 27 ஆம் திகதி சந்திப்பு

கொழும்பு,ஜூலை16

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமை அழைத்திருக்கிறது. எல்லா எம்.பிக்களும் தவறாது சமுகமளிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

27 ஆம் திகதிச் சநதிப்பினபோது முக்கிய அரசியல் விடயங்கள் பற்றிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக் கட்சி மாநாட்டை கூட்டக் கோருகிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை16

தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்தும் பொருளாதார நெருக்கடிகள் குறித்தும் விவாதிப்பதற்காக அரசு விரைவில் சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டவேண்டும் என்று ஜனாதிபதி கோரியுள்ளார்.

ஜனாதிபதி சார்பாக அவரது ஊடக ஆலோசகர் ஹரீம் பீரிஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுப் பதிவில் ட்றோலர் இருந்ததாலேயே அதைத் தடுத்து வைப்பதற்கு முடிவுசெய்யப்பட்டது!

### அரசுத் தரப்பு தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை16

"வெளிநாட்டுப் பதிவில் ட்றோலர் இருந்ததாலேயே அதைத் தடுத்துக் காங்கேசனுக்குக் கொண்டுசெல்ல முடிவானது"

இப்படிக் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் குறித்து இலங்கை அரசு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஜூலை 13ஆம் திகதி மாலை 5மணி அளவில் வடக்கு - கிழக்குக் கடலில் ரோந்தில் ஈடுபட்டிருந்த கடற்படைப் படகுகள் இரணைதீவை அண்டிய பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நகர்ந்து கொண்டிருந்த இரு மீன்பிடி ட்றோலர்களை கண்டுபிடித்தனர்.

அவற்றைத் துரத்திய சமயம் அந்த ட்றோலர்களுள் ஒன்று மன

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இனிய நாளிதழ்

# விளையாட்டு

## டெஸ்ட் அணியில் யுவராஜ், கை.:.ப்?

### தேர்வுக் குழுவினர் அவசர கூட்டம்

இங்கிலாந்துடன் டெஸ்ட் போட்டிகளில் மோதவுள்ள இந்திய அணிக்கான வீரர்கள் தெரிவில் தேர்வாளர்கள் புதிய நெருக்கடியை



எதிர்நோக்கியுள்ளனர்.

'நட்வெஸ்ட்' கிண்ணத்தொடரின் இறுதிப் போட்டியில் இளம் வீரர்களான யுவராஜ் சிங், முஹமட் கை.:.ப் ஆகியோரின் அபார துடுப்பாட்டமே இதற்குக் காரணம்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் தோல்வியைத் தழுவும் நிலையிலிருந்த இந்திய அணியை யுவராஜ் சிங், முஹமட் கை.:ப் ஆகியோர் தமது அபார துடுப்பாட்டம் மூலம் வெற்றி பெறச்செய்தனர்.

இவர்கள் ஒருநாள் போட்டிகளுக்கான அணியில் மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தனர். டெஸ்ட் போட்டிக்கான அணியில் சேர்க்கப்படவில்லை. ஒருநாள் போட்டிகள் முடிவுற்றதும் யுவராஜ், கை.:.ப், தினேஸ் மொங்கியா ஆகியோர் தாயகம் திரும்புவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதேவேளை சிவ் சுந்தர்தாஸ், சஞ்சய் பங்கார், வஸிம் பாரி, விக்கெட் காப்பாளர் பார்த்திவ் பட்டேல் ஆகியோர் டெஸ்ட் போட்டிகளுக்காக இங்கிலாந்துக்குச் செல்லவிருக்கின்றனர்.

ஆனால், யுவராஜ் சிங், கை.:.ப், மொங்கியா ஆகியோர் தொடர்ந்தும் இங்கிலாந்தில் தங்கியிருக்குமாறு



கோரப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய கிரிக்கெற் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா தேர்வுக் குழுவினரை இன்று செவ்வாய்க்கிழமை அவசர ஆலோசனைக் கூட்டமொன்றுக்கு வரும்படி பணித்துள்ளார். டெஸ்ட் அணி வீரர்கள் பட்டியலை தேர்வுக்குழுவினர் மாற்றி அமைப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ம)

## 13 வயதுக்குட்பட்டோர் பாடசாலை மட்ட கிரிக்கெட்

### இன்று குடாநாட்டில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் 13வயதுக்குட்பட்டோருக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் இன்று செவ்வாய் முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 12 பாடசாலை அணிகள் கலந்துகொள்கின்றன. அணிகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படும். முதற்சுற்றுப் போட்டிகள் 'லீக்' முறையில்இடம்பெறும்.

'ஏ' பிரிவில் யாழ்.மத்திய கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, சென்.ஜோன்ஸ்கல்லூரி, தெல்லிப்பழை யூனியன்கல்லூரி மற்றும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிஆகியன இடம்பெற்றுள்ளன.

'பி' பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

ஆகியன இடம்பெற்றுள்ளன.

★ சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி - சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானம்.

சென்.பற்றிக்ஸ் எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி - சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்,

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி எதிர் யாழ்ப்பாணம இந்துக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி மைதானம். (ம-ரி-86)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை16

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்கள் பற்றிய விரைம் வரு மாறு:-

★ பிற்பகல் 4 மணிக்கு பொலிகை விநாயகர் வி.க. எதிர் நக்கீரன் வி.கழகம்.

★ மாலை 5 மணிக்கு நவசக்தி வி.க.எதிர் தொண்டமானாறு கலைவாணி வி.க. (ம-ரி)

★ ★ ★

யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணி - புற்றீசியன் வி.க.அணி எதிர் கே.சி.சி.சி.வி.க. அணி.

★ மாலை 5.15 மணி - ஓல்ட்ஸ் கோல்ஸ் வி.க. அணி எதிர் பல்கலைக்கழக அணி. (ம-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை16

சிவகுரு பொற்பதி விளையாட்டுக் கழகம் அமரர் சிவகுரு ஞாபகார்த்தமாக நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். மூன்றாம் இடத்துக்கான ஆட்டமும் இன்று நடைபெறும்.

இறுதியாட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனீஸ் வி.கழகத்தை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதும்.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் ஊரெழு றோயல் வி. கழகம் கலட்டி ஐக்கிய வி.கவும் கலந்து கொள்கின்றன. (ம)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மக்கள் வங்கியின் வடவலய அனுசரணையுடன் நடத்தும் சகல வயதுப் பிரிவினருக்குமான மேசைப்பந்தாட்டம் நாளை புதன்கிழமை மாலை 2.30 மணிக்கு மத்திய கல்லூரியில் இடம்பெறும். (ம)

## சாவகச்சேரியில் மக்கள் எழுச்சி....



ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட பேரணி சாவகச்சேரி பிரதேச செயலகத்தை நோக்கி நகரும் காட்சி.





இராணுவ வாகனம் ஒன்றை பொதுமக்கள் வழிமறித்து நிற்பதையும், அவர்களைத் தாண்டி அவ்வாகனத்தைச் செல்ல விடுவதற்கு பொலீஸார் முயன்றுகொண்டிருப்பதையும் முதலாவது [illegible] பிரதேச செயலகத்திற்கு முன்பாகச் செல்லும் பாதை பொதுமக்கள் போக்குவரத்துக்குத் தடை [illegible] அந்தப் பாதைக்குள் பேரணியில் வந்தவர்கள் [illegible] மறித்து நிற்கும் இராணுவ ட்ராக்டரை அடுத்த படத்திலும் காணலாம்.



பேரணியின் முன்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை. சேனாதிராஜா, அ.விநாயகமூர்த்தி ஆகியோரும், பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகளும் நடந்துவருதை முதற்படத்திலும், பிரதேச செயலகத்துக்கு முன்பாக கண்டிவீதியை வழிமறித்து பேரணியில் சென்றவர்கள் அமர்ந்திருப்பதையும் இரண்டாவது படத்திலும் காணலாம்.

## ஒப்பந்தத்தை மீறும் இராணுவத்தின் செயற்பாடுகள் நாளாந்தம் அதிகரிப்பு

### மக்கள் நலச் சேவைகள் சங்க மகஜரில் தெரிவிப்பு

தென்மராட்சி,ஜூலை16

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாமல், அதனை மீறி இராணுவம் செயற்படுகின்றது. படையினரின் இத்தகைய செயற்பாடுகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன.

- இவ்வாறு நேற்றைய பேரணியின் இறுதியில் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைப் பிரதமரும் விடுதலைப் புலிகளின் தலைவரும் கைச்சாத்திட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டின் பிரதான நோக்கம் மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதாகும்.

தமிழ் மக்கள் எதுவித கெடுபிடிகளுமில்லாது சுதந்திரமாகத் தமது வாழ்விடங்களில் வாழவும், தொழில் செய்யவும், போக்குவரத்தை மேற்கொள்ளவும், வழிபடவும், கல்விகற்கவும் இந்த ஒப்பந்தம் வழி அமைக்கிறது.

[illegible] இந்த ஒப்பந்தத்தை மதித்து நடக்காமல், அதனை மீறும் வகையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இராணுவத்தின் செற்பாடுகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. இதனைத் தங்கள் கவனத்துக்கும், தங்கள் ஊடாகச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கும் கொண்டு வரவிரும்புகின்றோம்.

அவையாவன:-

★ தென்மராட்சியில் பல பகுதிகள் இராணுவப் பிரதேசமாக இருப்பதால் அப்பகுதி மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் குடியிருக்க விடாது தடுக்கப்பட்டுள்ளனர். 2ஆயிரத்து 660 குடும்பங்களுக்கு தமது சொந்த வீடுகளில் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

★ குடாநாட்டின் பிரதான நெல் விளையும் பிரதேசமான கண்டி வீதிக்கு மேற்குப்புறம் தொடங்கி தனங்கிளப்பு, மறவன்புலவு, அறுகுவெளிப் பகுதிகள் யாவும் இராணுவ வலயமாக மாற்றப்பட்டுள்ளன. தென்மராட்சியின் 4 ஆயிரத்து 383 ஹெக்டேயர் விவசாய நிலப்பரப்பில் 2ஆயிரத்து 992 ஹெக்டேயர் நிலப்பரப்பு இன்னும் பயிர்ச்செய்கைக்கு அனுமதிக்கப்படவில்லை.

★ தென்மராட்சி பிரதேச மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. கோவிலாக்கண்டி மற்றும் கச்சாய் கரையோரங்களில் தொழில் செய்யும் மீனவர்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகளும், வரையறைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

★ நுணாவில், கைதடி, நாவற்குழி, மீசாலை போன்ற பகுதிகளில் மக்கள் வாழ்விடங்கள், வயல்கள் என்பவற்றை உள்ளடக்கி பாரிய இராணுவ முகாம்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இதனால் பலா தமது வீடுகளை இழந்திருப்பதுடன், அம்முகாம்களுக்கு அருகிலுள்ளவர்களும் தமது இருப்பிடங்களில் வாழ்வதற்கு அஞ்சுகிறார்கள்.

★ 40இற்கு மேற்பட்ட கோவில்கள் வழிபாட்டுக்கு அனுமதிக்கப்படாதவையாயும், சுதந்திரமாகச் சென்று வழிபட முடியாதனவாகவும் உள்ளன.

★ ஆறு பாடசாலைகள் இன்னும் தமது சொந்த இடங்களில் இயக்க முடியாதவையாக உள்ளன.

★ இப்பிரதேச மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு மட்டுமல்ல, வாழ்வின் முடிவில் நிகழ்த்தும் இறுதிக் கிரியைகளுக்கும் கூட சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. பிரதான மயானமான கண்ணாடிப்பிட்டி உட்பட 10 மயானங்கள் மக்கள் பாவனைக்குத் தடைவிதிக்கட்டுள்ளன.

(11ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஸா பிரதேசத்தில்
# வெடிப்பொருள் தொழிற்சாலை
# இஸ்ரேலிய தாக்குதலில் தகர்ப்பு!

லண்டன்,ஜூலை16

காஸா பிரதேசத்தில் உள்ள பலஸ்தீனக்கட்டமொன்றை இஸ்ரேலிய விமானங்கள் நேற்று குண்டு வீசித் தகர்த்தன. இந்தக் கட்டடத்தில் பலஸ்தீனத் தீவிரவாதிகளின் வெடி பொருள் தொழிற்சாலை இயங்கி வந்ததாக இஸ்ரேலிய இராணுவம் கூறியுள்ளது.

கான்யூனுஸ் நகரருகே உள்ள குராரா பகுதியில் இந்தத் தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

இஸ்ரேலிய விமானப்படையின் 'அபசே' ரக ஹெலிகொப்டர்களும் எப்-16ரக விமானங்களும் இந்தக் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டதாகவும் -



இஸ்ரேலிய விமானக் குண்டு வீச்சில் தகர்ந்துகிடக்கும் பலஸ்தீனக் கட்டடம்

இதில் 3 மாடிகளைக் கொண்ட அந்தக் கட்டடம் மிகமோசமாகச் சேதமடைந்ததாகவும் -

அந்தச் சமயத்தில் கட்டடத்துக்குள் எவரும் இல்லாத போதும் குண்டுச் சிதறல்கள் காரணமாக 5 பலஸ்தீனர்கள் காயமடைந்துள்ளதாகவும் -

நேரில் கண்டவர்கள் கூறினர்.

தகர்க்கப்பட்ட கட்டடம் முன்னர் ஹமாஸ் அமைப்பினரின் அலுவலகமாக இருந்தது.

காஸா நிலப்பகுதியில் இஸ்ரேலிய விமானத் தாக்குதல் நடப்பது சமீப காலங்களில் இதுவே முதற் தடவை என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில் -

காஸாவில் நீதிமன்றம் ஒன்றில் விசாரணை நடந்து கொண்டிருந்த போது உள்ளே நுழைந்த மக்கள் கூட்டம் ஒன்று அங்கு நின்றிருந்த குற்றஞ்சாட்டப்பட்டவரை அடித்துக் கொன்றுவிட்டது.

அபெட் அல் ஹைற அல் சபாபி என்ற பலஸ்தீனரே அடித்துக் கொல்லப்பட்டவராவார்.

கடந்த மாதம் 5 ஹமாஸ் இயக்கத் தீவிரவாதிகளை தெற்கு காஸாவில் வைத்து இஸ்ரேலியப்படையினர் சுட்டுக் கொன்றிருந்தனர். அந்தச் சம்பவத்தில் இஸ்ரேலியப் படையினருக்கு ஹமாஸ் இயக்கத்தவர் குறித்த உளவுத் தகவல்களை தெரிவித்ததாக அந்த நபர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு விசாரணை நடைபெற்ற போதே 3 மாடிக் கட்டடத்தின் மீது இஸ்ரேலிய விமானங்கள் குண்டுவீசித் தாக்கியதாகவும் -

இதனால் ஆத்திரமடைந்த பலஸ்தீனர்கள் நீதிமன்றத்துக்குள் நுழைந்து இஸ்ரேலிய இராணுவத்துக்கு உதவியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த அந்த நபரை அடித்துக்கொன்றதாகவும் - கூறப்படுகிறது.

(ஓ-9)

## விண்வெளியில் பறக்கப்போகும் பட்டுக்கொடி

உலக அரங்கில்

புதுடில்லி,ஜூலை16

இந்த மாத இறுதியில் தனது இரண்டாவது விண்வெளிப் பயணத்தை மேற கொள்ளவிருக்கும் இந்திய விண்வெளி வீராங்கனையான கல்பனா சர்மா, பட்டினால் தயாரிக்கப்பட்ட கொடி ஒன்றை விண்வெளிக்கு எடுத்துச் செல்லவுள்ளார்.

இந்தியாவில் பிறந்த இவர், "இந்தப் பட்டுக்கொடி ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் இடையே உள்ள உறவைப் பிரதிபலிக்கும் ஒரு கொள்கைச சின்னமாக இருக்கும்" என்று தெரிவித்தார்.

(ஓ-9)

## எவரெஸ்ட் உச்சியில் திருமணம்; சீன மையம் சாதனை முயற்சி!

பீஜிங்,ஜூலை16

எவரெஸ்ட் சிகரத்தில் பல ஜோடிகளுக்குத் திருமணஞ் செய்து வைப்பதற்கு சீனாவின் திருமணத் தகவல் மையம் ஏற்பாடுசெய்து வருகின்றது.

உலகின் அதிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் பல ஜோடிகளுக்குத் திருமணஞ் செய்து வைப்பதன் மூலம் உலகசாதனைப் புத்தகமான 'கின்னஸ்' இல் இடம்பெற ஜியாங்ஜிங் இளைஞர் திருமண வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை மையம் திட்டமிட்டுள்ளது.

எவரெஸ்ட் சிகரத்தை அடைவதற்கு 14 நாள்கள் எடுக்கும். இதில் பங்கேற்க விரும்பும் ஜோடி இரண்டு லட்சம் ரூபாவைத் தயாராக வைத்திருக்க வேண்டுமென அந்த மையம அறிவுறுத்தியுள்ளது.

நவீன முறையில் திருமணங்களை நடத்த வேண்டுமென்ற மனோபாவம் சீன மத்தியதரக் குடும்பங்களிடையே கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ஓ-9)

## பேர்ல் கொலை வழக்கில் சந்தேக நபருக்கு தூக்கு!

இஸ்லாமாபாத்,ஜூலை16

அமெரிக்கப் பத்திரிகையாளர் டானியல் பேர்ல் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பிரிட்டிஷ் பிரஜையான அஹமட் ஒமர்சையீட் ஷேக்கிற்கு பாகிஸ்தானின் பயங்கரவாதத்தடுப்பு சிறப்பு நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

அவருடன் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பஹத நசீம், சல்மான் சாகிப், ஷேக் அடில் ஆகியோர் மீதான குற்றங்களும் நிரூபிக்கப்பட்டதாக நீதிபதி தெரிவித்தார். அவர்கள் மூவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. பாகிஸ்தானில் ஆயுள் தண்டனைக் காலம் 25ஆண்டுகள் ஆகும். பாகிஸ்தானில் மரண தண்டனை தூக்கிலிடப்பட்டே நிறைவேற்றப்படுகிறது.

இந்த வழக்கு, விசாரணை நேரத்தை வீணாக்கும் செயலாகும். ஏனெனில் இஸ்லாமுக்கும் அதன் எதிரிகளுக்கும் இடையிலான யுத்தத்தில் இத்தகைய விசாரணைகள் தேவையற்றவை.



அஹமட் ஒமர்சையிட் ஷேக்

இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்ட அஹமட் ஒமர் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு சிறிது நேரம் முன்னர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

(ஓ)

## ஒலியைவிட இருமடங்கு வேகம் கொண்ட
# அடுத்த தலைமுறை 'சுப்பர் சொனிக்'கின் சோதனைப் பறப்பு முயற்சி தோல்வி!

சிட்னி,ஜூலை16

ஒலியின் வேகத்தைப் போல இருமடங்கு வேகத்துடன் பறக்கும் விமானம் ஒன்றை சோதனை முயற்சியாக ஜப்பானிய விஞ்ஞானிகள் பறக்கவிட்டபோது அது தரையில் மோதி வெடித்துச் சிதறியது.

தெற்கு ஆஸ்திரேலியாவில் 'ரொக்கெட்' சோதனைகள் நடத்தப்படும் பாலைவனப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.


ஜப்பானிய விஞ்ஞானிகள் கடந்த 5 வருடகாலமாக முயன்று சுமார் 16 கோடி அமெரிக்க டொலர்கள் செலவில் தயாரித்த இந்த ஜெட் விமானம் தரையில் இருந்து புறப்பட்டு ஒரு வினாடிக்குள் சுழன்றபடி வந்து பூமியில் மோதியது.

'நெக்ஸ்ட் - 1' என்று பெயரிடப்பட்ட இந்த 'சுப்பர் சொனிக்' ஜெட் விமானம் மணிக்கு 2450 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கக் கூடியதாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

இந்த விமானம் 38 அடிகள் நீளமாக உள்ள ரொக்கெட்டில் பொருத்திப் பறக்கவிடப்பட்டது. 18 கிலோமீற்றர் உயரம் வரை பறந்ததும் றொக்கெட்டிலிருந்து விமானம் பிரியவேண்டும். ஆனால் 100 மீற்றர் உயரத்திலேயே விமானம் பிரிந்து சுழன்றபடி வீழ்ந்து வெடித்துச் சிதறியது. ஆளின்றியே விமானம் பறந்ததால் இதில், யாரும் காயமடையவோ, உயிரிழக்கவோ இல்லை. எனினும் கடந்த ஆறு மாதங்களாக பரிசோதனை முயற்சிக்ளில் தீவிரமாக ஈடுபட்டிருந்த விஞ்ஞானிகளுக்கு இது ஒரு பாரிய இழப்பு எனக் கூறப்பட்டது. கொன்கோர்ட் விமானத்தைப் போன்று இருமடங்கு வேகத்தையும், அதன் சத்தத்தில் பாதி அளவே உள்ள சத்தத்தையும் - கொண்ட இந்த விமானம் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டால் பிரயாணிகள் ஜப்பானிலிருந்து அமெரிக்காவின் மேற்குக் கரைக்கு 4 மணித்தியாலங்களில் செல்ல முடியும் எனக் கூறப்படுகிறது.

இந்த ஜெட் விமானம் தரையில் மோதி வெடித்தமைக்கு என்ன காரணம் என்பது குறித்த தகவல் எதையும் இதுவரை ஜப்பானிய அரசின் தேசிய விண்வெளி ஆய்வு மையம் வெளியிடவில்லை.

(ஓ-9)



ஜப்பானிய விஞ்ஞானிகளின் உழைப்பில் உருவான சுப்பர் சொனிக் ஜெட் விமானத்தின் சோதனைப் பறப்பின்போது......

(1) றொக்கெட்டுடன் சீறிக்கிழம்பும் விமானம்.

(2) திசைமாறித் தரையை நோக்கித் திரும்புகிறது.

(3) தரையை அண்மிக்கிறது.

(4) வெடித்துச் சிதறுகிறது.

## அஸாம்-பீஹார் பகுதிகளில் வெள்ளத்தால் பேரழிவு!

புதுடில்லி,ஜூலை16

இந்தியாவின் அஸாம் மற்றும் பீஹார் மாநிலங்களில் வெள்ள நிலைமை தொடர்ந்து கவலையளிப்பதாகவே உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

அஸாமில் பல இடங்களில் அபாய அளவுக்கு மேலே பாயும் ப்ரம்மபுத்திர ஆற்று வெள்ளத்தில் 12 மாவட்டங்கள் மூழ்கியுள்ளன.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தெமாஜி மாவட்டத்தில் சுமார் 4 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பிஹாரில் எல்லா முக்கிய நதிகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

சீதாமாரி, தர்பங்கா, மதுபணி, சியோகர் மற்றும் முஷபர்பூர் மாவட்டங்களில் சுமார் 5லட்சம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.(ஓ-9)

## வெள்ளைக்கார தம்பதியர்க்கு கறுப்பின இரட்டைக் குழந்தைகள்

லண்டனிலுள்ள ஒரு மருத்துவமனையில் வெள்ளைக்கார தம்பதியினருக்கு சோதனைக் குழாய் முறை மூலம் கறுப்பின இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. இதுபோன்ற ஒரு சம்பவம் உலகில் நடந்திருப்பது இது மூன்றாவது தடவையாகும்.

இச்சம்பவம் பிரிட்டனில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இக்கறுப்பு இன குழந்தைகளின் பெற்றோருக்கு பெரும் உளரீதியான பிரச்சினைகள் ஏற்படும் என்று நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

கறுப்பின தம்பதியரின் கருவூட்டப்பட்ட முட்டைகள், தாயான வெள்ளைக்கார பெண்ணின் கர்ப்பப் பைக்குள் செலுத்தப்பட்டிருக்கலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.(ம)

## வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த பால்கன் தலைவர்கள் சந்திப்பு

சரஜீவோ,ஜூலை16

பொஸ்னியா, குரோஷியா, யூக்கோஸ்லாவியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் பொஸ்னியத் தலைநகர் சரஜீவோவில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பை நேற்று நிகழ்த்தினர்.

யூகோஸ்லாவிய அதிபர் வொஜிஸ்லேவ் கொஸ்டுனிகா, குரோஷிய அதிபர் ஸ்டிப் மெசிக், பொஸ்னிய தலைவர்களான பெரிஸ் பெல்கிக், ஜிங்கோ ரெடிஸிக், ஜோஜோ கிரிசரோவிக் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

இந்த 3 நாடுகளும் சம்பந்தப்பட்ட பொஸ்னியப் போரின் பின்னர் இந்த நாடுகளின் தலைவர்கள் முதற்றடவையாகச் சந்திக்கின்றனர்.

ஐரோப்பிய தேசியத்தில் இந்த மூன்று நாடுகளும் இணைந்து செல்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாக இந்தச் சந்திப்புக் கருதப்படுகிறது. அத்துடன் இந்தச் சந்திப்பின் போது கடந்தகால கசப்புணர்வுகளை மறந்து ஒத்துழைப்பை மேம்படுத்த வகைசெய்யும் ஒப்பந்தம் ஒன்றில் மூன்று தலைவர்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

இதேசமயம், பொஸ்னியப் போரினால் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான அகதிகள் 7 வருடங்களாகியும் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை. அத்துடன் பல்லாயிரக்கணக்கானவர்கள் பெற்று வந்த ஓய்வூதியம் போரின் பின்னர் கொடுக்கப்படவில்லை. இவைபோன்ற [illegible] சில சவால்களை மூன்று நாடுகளும் சமாளிக்க வேண்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ-9)

## லண்டன் விமானத்தில் ஆபிரிக்க முதலைகள்

லண்டன்,ஜூலை16

லண்டனின் ஹுத்ரு விமான நிலையத்தில் தரித்துநின்ற விமானமொன்றின் சரக்கு வைக்கும் இடத்தில் அரிய வகையான பத்து முதலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த முதலைகள் பாதுகாக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவையாகும்.

நைஜீரியாவிலிருந்து தென்கொரியாவுக்குச் சென்றுகொண்டிருந்த இந்த விமானம் ஹீத்ரு விமான நிலையத்தில் தரையிறங்கியது. அப்போது ஆபிரிக்காவைச் சேர்ந்த ஐந்து அடி நீளமுள்ள இந்த குள்ளரக முதலைகள் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டன.

(ஓ-9)

## ஆப்கானில் ஹெரோயின் மீட்பு!

காபூல்,ஜூலை16

ஆப்கானிஸ்தானின் தஜிக்கிஸ்தான் எல்லைப் பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த ரஷ்ய வீரர்கள் 215 கிலோ ஹெரோயின் போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளார்கள்.

போதைப் பொருள் கடத்தல் [illegible] திச் சண்டையில் நான்கு கடத்தல்காரர்கள் கொல்லப்பட்டனர்.

(ஓ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் யுத்தத்தின் தளபதி தோழர் க.உமாமகேஸ்வரன்

**தமிழீழ மக்கள் விடுதலைக்கழக ஸ்தாபகர் அமரர் க.உமா மகேஸ்வரனின் நினைவு நாளான இன்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரால் 13ஆவது வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதனையொட்டி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரால் இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.**

தெல்லிப்பழை, வறுத்தலைவிளானைச் சேர்ந்த ஆசிரியர் க.கதிர்காமருக்கும், க.பரஞ்சோதிக்கும் இரண்டாவது பிள்ளையாகவும் சிரேஷ்ட புத்திரனாகவும் 1945ஆம் ஆண்டு மாசி மாதம் 18ஆம் திகதி பிறந்த அமரர் உமாமகேஸ்வரன் தன் கல்வியை ஆரம்பம்முதல் இறுதிவரை யாழ்.தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கற்றார். இவருக்கு 5 சகோதரங்கள் உண்டு.

தனது கல்வியை முடித்துக் கொண்ட இவர், 1966 தொடக்கம் பத்து ஆண்டுகள் நில அளவையாளராகக் கடமையாற்றினார். நில அளவைத் திணைக்களத்தில் வருடா வருடம் நடத்தப்பட்டுவந்த இறுதிப் பரீட்சை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமல்லாது 1967 முதல் தமிழிலும் நடத்துவதற்கு முதல் குரல் கொடுதது அதில் வெற்றியும் கண்டார். 1967 முதல் தமிழில் பரீட்சை நடைபெற வழிவகுத்ததுடன் நில அளவைத் திணைக்கள சட்ட திட்ட நூல்களை தமிழில் மொழிபெயர்க்கும் குழுவில் இவரும் இருந்தார். இந்தக் காலப் பகுதியில் இவர் பலவிதமான தமிழர் போராட்டம் சம்பந்தமான இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1977ஆம் ஆண்டு ஓமான் நாட்டின் அரச திணைக்களத்தில் இலங்கையில் முதல் நில அளவையியலாளராக வேலைவாய்ப்புக் கிடைத்தும் அங்கு செல்ல மறுத்தார். செல்ல மறுத்த தன் காரணத்தை நண்பர்கள் வினவிய பொழுது 'நாம் சொந்த நலனுக்காக வெளிநாடு சென்றால் தமிழின விடிவிற்கு யார் உழைப்பது?' என்பதே அவரின் பதிலாக அமைந்தது.

கல்வி கற்கும் காலத்திலேயே தமிழரசுக் கட்சியில் தீவிர ஆதரவாளனாக இருந்தவர். பின் தந்தை செல்வாவின் விசுவாசத்திற்கும், அண்ணன் அமிர்தலிங்கத்தின் நெருங்கிய நண்பனாகவும் தோள்கொடுத்து நின்றார். 1975ஆம் ஆண்டு பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழீழ பிரகடன மாநாட்டில் காவல்துறையினர் பொது மக்களைத் தாக்கியதைத் தாங்காது காவல்துறையினருடன் எதிர்த்து நின்று வாதிட்டதற்காக கைதுசெய்யப்பட்டு 45 நாள்கள் யாழ்.சிறையில் சித்திரவதைப்பட்டார். அணிசேரா நாடுகளின் மாநாடு கொழும்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியில் நடைபெற்ற பொழுது இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் பற்றி நூலாக அச்சிட்டு கடும் காவல்களின் மத்தியில் மாநாட்டில் பங்குபற்ற வந்திருந்த வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு மாறுவேடத்தில் சென்று விநியோகித்து தமிழர்களின் பிரச்சினையை உலகறியச் செய்தார்.

இவரது சமூக சேவைக்கு உதாரணமாக 1977, 1981 காலப்பகுதியில் இடம்பெற்ற இன வன்செயல்களினால் ஏதிலிகளாக ஆக்கப்பட்டிருந்த மக்களை இவரால் உருவாக்கப்பட்ட காந்தீயம் அமைப்பின் ஊடாக நெடுங்கேணியில் உள்ள கென்ட் மற்றும் டொலர் பண்ணைகளில் குடியேற்றி அவர்களுக்கு மறு வாழ்வளித்தார். இந்நிலையில் காந்தீயம் அமைப்பும் ஸ்ரீலங்கா அரசால் தடைசெய்யப்பட்டு டாக்டர் ராஜசுந்தரம் போன்ற முன்னணித் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். அதிலிருந்து தப்பிய உமா, மீண்டும் மக



அமரர்
க.உமாமகேஸ்வரன்

களின் புனர்வாழ்வுக்கு தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தை (T.R.R.O) உருவாக்கினார்.

பின்பு 1983ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் T.R.F என்னும் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தினை உருவாககி அதன்மூலம் வடகிழக்குப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புது வாழ்வு அளித்தார்.

1979ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் தலைவராக இருந்த அவர், இயக்கத்தில் உள்முரண்பாடுகள் கூர்மையடைந்ததன் காரணத்தினால் அதிலிருந்து பல தோழர்களுடன் வெளியேறி 1980களின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைக் கழகம் என்னும் பெயரில் ஏனைய தோழர்களுடன் சேர்ந்து ஆரம்பித்தார்.

பரந்துபட்ட மக்கள் போராட்டத்தின் ஊடாகவே ஒரு முழுமையான விடுதலையைப்பெற முடியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில் கிராமங்கள், நகரங்கள் தோறும் தோழர்களை அனுப்பி வெகுஜன அமைப்புகளை நிறுவியதுடன், தமிழீழ விடுதலைக்கழகம் என்ற கழகத்தின் பெயரை தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் எனப் பெயர்மாற்றம் செய்தார் உமா.

1976இல் போராட்ட இயக்கங்களின் சர்வதேச பயிற்சிப் பாசறையாக விளங்கிய பலஸ்தீன விடுதலை இயக்கத்தில், தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன முறையாகப் பயிற்சி பெறச் சென்ற இருவரில் இவரும் ஒருவர். P.L.O வின் விசேட இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்ட இவர், சிறப்பு அரசியல் பயிற்சியையும் முடித்துக் கொண்டு நாடு திரும்பினார்.

ஒரு விடுதலைப் போராட்டம் வெற்றிபெற வேண்டுமானால் அவ்வமைப்பு மக்கள் அமைப்பு, நிரந்தர இராணுவம், சரியான சித்தாந்தம், பொருளாதாரம், சர்வதேச அங்கீகாரம், தொடர்பு சாதனங்கள் போன்ற 6 அம்சங்களையும் சரியான முறையில் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் ஒரு விடுதலைப் போராட்டத்தில் அரசியலும், இராணுவமும் இரு சமாந்தரக் கோடுகளாகச் செல்ல வேண்டியவை. இதில் ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் காணப்படுமானால் அது உரிமைப் போராட்டத்தையே திசைதிருப்பி விடும் - என்று உமா மகேஸ்வரன் கூறினார்.

சகோதர முரண்பாடுகளால் கழகத்தின் பல முன்னணித் தோழர்கள் பலியானபோது எதிர் நடவடிக்கை மேற்கொள்ள சில தோழர்கள் முயற்சித்தபோது அவர்களை அழைத்து நாம் எம்மிடையே முட்டிக்கொண்டால் எமது இனம் அழிய நாமே வழி தேடிக்கொடுத்தவர்கள் ஆகிவிடுவோம் என்று கூறி அவர்களை அமைதிப்படுத்தினார். இன்று நடைபெறும் நிகழ்வுகளைப் பார்க்கும் போது அவர் கூறியது எவ்வளவு உண்மை என்று புலப்படுகிறது.

மானிடத்தின் விடிவிற்காக தன்னை அர்ப்பணித்து செயற்பட்டு வந்த தோழர் அமரர் உமா மகேஸ்வரன் அவர்கள் 16.07.1989 அன்று கொழும்பில் சில்லறைக்கு விலை போகும் சில கைக்கூலிகளால் படுகொலை செய்யப்பட்டார். இவர் தொடர்ந்து வந்த பாதையை முன்னெடுத்துச் சென்று மானிடமாண்பிற்காக எம்மை அர்ப்பணித்து செயற்படுவதே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும். ☆

## கிராம அலுவலர் நியமனம்

சண்டிலிப்பாய்,ஜூலை16

நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்துவந்த மாதகல் கிழக்குக் கிராம அலுவலர் பதவி நிரப்பப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றி சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்கு அண்மையில் இடமாற்றம் பெற்று வந்தவரான எஸ்.அருள்ஞானம் என்பவர் மாதகல் கிழக்குக் கிராம அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதுவரைகாலமும் பண்டத்தரிப்பு கிராம அலுவலர் இ.துரைராஜா மாதகல் கிழக்குக் கிராம அலுவலராக பதில் கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

## உதவிப் பணம் பெறுவோர் விவரம் மீளாய்வு

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்று வருபவர்களின் விவரங்களை இப்பிரிவு சமூகசேவை உத்தியோகத்தர் அ.அமிர்தலிங்கம் இப்பிரிவிலுள்ள தபால் அலுவலகப் பிரிவு ரீதியாக மீளாய்வு செய்துவருகின்றார்.

இம்மாதம் 27ஆம் திகதியன்றும், 29ஆம் திகதியன்றும் ஆனைக்கோட்டை உபதபால் அலுவலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்று வருபவர்களின் விவரங்கள் மீளாய்வு செய்யப்படவுள்ளது. (ஒ-135)

## புத்தூர்ப் பகுதியில் மின்கம்பங்கள் நிறுத்தும் பணி

புத்தூர்ப் பகுதியில் மின்சாரம் வழங்குவதற்காக மின்கம்பங்கள் நிறுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை வீதியில் உயர் மின்அழுத்த 'வயர்கள்' பொருத்துவதற்கான கம்பங்களே நிறுத்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் சுன்னாகம் மின் நிலையத்தில் மின்பிறப்பாக்கிகள் புதிதாகப் பொருத்தப்பட்டு மின்சாரம் பிறப்பிக்கப்படுவதைத் தொடர்ந்து ஏற்கனவே மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கு வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது. (ஒ-9)

**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.**

**VACANCIES**

☆ Computer Lecturer
*Qualification:*
Degree in Computer Science/Engineering or British Computer Society.

☆ Computer Instructor
*Qualification:*
JCTT Computer Diploma or Dip. in Computer System Design (NIBM) or Australian Computer Society or Any other equivalent qualification.

On or before 20 July 2002.

Short listed candidates will be called for an interview.

*Apply with Bio-data to:*
**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.**

Tel No.: 070-213139 (C/22948) E-mail: jcit@sltnet.lk

## நீலங்காடு பகுதி மக்கள் மீள்குடியமர கோரிக்கை

முளாய்,ஜூலை16

காரைநகர், நீலங்காடு கிராம மக்கள் தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர்வதற்கு அனுமதி கோரியுள்ளனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக நீலக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம் ஊர்காவற்றுறை பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டதாவது:-

எமது நீலங்காடு கிராமத்தில் இருந்து 1990ஆம் ஆண்டு அசம்பாவிதம் காரணமாக இடம்பெயர்ந்து பல இடங்களில் எம்மக்கள் வாழ்கின்றார்கள். தற்போதைய சமாதான யுத்த நிறுத்த வேளையில் எமது கிராமத்தைச் சேர்ந்த சுமார் 50 குடும்பங்களை மீண்டும் அக்கிராமத்தில், பாதுகாப்புடன் மீளக்குடியமர்வதற்கு அனுமதி பெற்றுத்தருமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது. (ஒ)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவரான

### திருமதி நல்லையா இராசாங்கம்

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அமரரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அங்கத்தவர்கள்/நிர்வாக உறுப்பினர்கள்
நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கன
கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

(6040)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1955 - 03 - 23



விண்ணில் 2001 - 07 - 25

### செல்வி கனகசபை சோதிமலர்

திதி:2002.07.16

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை உன் நினைவு
வருந்துகிறோம் உமை இழந்து
வந்திடுவாய் உயிர் சுமந்து
உனை இழந்து எங்கள் உள்ளம்
உருகுதம்மா - என்றும்
*உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*17/5, சாஸ்திரியார் லேன்,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (6042) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லையா இராசாங்கம்

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த திருமதி நல்லையா இராசாங்கம் நேற்று (15.07.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பொன்னம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் (முன்னாள் தபால் அதிபர்) மற்றும் ருக்மணி (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்), மல்லிகாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சுகுணா, ஆனந்தவேல் மற்றும் பொன்னுச்சாமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சண்முகம், நல்லம்மா, நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வித்தியா, சரத்சந்திரன் (லண்டன்), ஸ்ரீரங்கன் (பிரான்ஸ்), சதீஸ் (பொறியியற்பீடம் - பேராதனை), ஸ்ரீராம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வினோத், பிரியங்கா, சந்தியா (லண்டன்), இந்து (லண்டன்), ரோஷினி (லண்டன்) ஆகியோரன் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.07.2002) செவ்வாய்க்கிழமை 11 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ருக்மணி ஆனந்தவேல் (மகள்)

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.* (6035)

### செல்வி பவளகாந்தன் கோபிகா

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பவளகாந்தன் கோபிகா நேற்று (15.07.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பவளகாந்தன் - மலர் தம்பதிகளின் அன்பு மகளாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிர்வேலி சந்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (6038) சி.பவளகாந்தன் *(ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## தேவை; பக்கச்சார்பின்மை

பாக்கு நீரிணைக் கடலில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற சம்பவமும் அதைத் தொடர்ந்து வெளியான அறிக்கைகளும், புரிந்துணர்வு ஒப்பந்தமும் அதில் இடம்பெற்றுள்ள யுத்திநிறுத்த நடவடிக்கை தொடர்பான ஏற்பாடுகளும் நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுமா என்ற சந்தேகத்தை பொதுமக்கள் மத்தியில் தோற்றுவித்திருக்கின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் யுத்தநிறுத்த ஏற்பாடுகளைக் கண்காணிக்கும் சர்வதேசக் கண்காணிப்பாளர்களின் பணி வெறுமனே சம்பவங்களை - நிகழ்வுகளை - கண்காணிப்பதுடன் மட்டும் அமைந்துவிடாது. சில சமயங்களில் விடயங்களை சீர்தூக்கிப் பார்த்து தீர்ப்புக்கூறும் நீதிதேவதையின் பணியும் - கடமையும் - அக்குழுவுக்கு உண்டு.

அந்தக் கடமையைச் செய்யும்போது பக்கம் சாராமல், நீதிதேவதை பின்பற்ற வேண்டிய அடிப்படை இயற்கை நீதி முறைகளைப் பின்பற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு கண்காணிப்புக் குழுவுக்கு தானாகவே சுமத்தப்பட்டுவிடுகின்றது.

மற்றைய இரு தரப்புகள் சம்பந்தமான விடயத்தில் தீர்ப்புக் கூறுவதற்கே இவ்வளவு தார்மீகப் பொறுப்பு இருக்குமானால், விடயத்தில் தானே நேரடியாகச் சம்பந்தப்பட்டு, தானும் ஒரு கட்சிக்காரராகும்போது இந்தப் பொறுப்பு இன்னும் அதிகமாகின்றது.

சனிக்கிழமை சம்பவம் தொடர்பான விவகாரத்தில் கண்காணிப்புக் குழுத்தலைவர் அவசரப்பட்டு விடுத்த அறிக்கையை நோக்கும்போது, இந்தப் பொறுப்புக்களை மறந்து, அவர் செயற்பட்டாரோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் - குறிப்பாக தமிழ்மக்கள் மத்தியில் - எழுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

கண்காணிப்புக் குழுவின் தலைவரின் அறிக்கைப்படி, சனிக்கிழமை இரவு பாக்கு நீரிணைக் கடலில் இடம்பெற்ற சம்பவத்தில் புலிகளும், கடற்படையினரும் மட்டும் நேரில் சம்பந்தப்படவில்லை. கண்காணிப்புக் குழுவின் இரண்டு உறுப்பினர்களும் நேடியாகச் சம்பந்தப்பட்டுள்ளனர். கடற்படையினர் சம்பந்தமான விவகாரத்தில் மட்டுமல்லாமல் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் இருவர் தொடர்பாகவும் புலிகள் பாரதூரமான யுத்தநிறுத்த மீறலில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று அப்பட்டமான குற்றம் சுமத்தியிருக்கின்றார் அவர்.

அவரது அறிக்கைப்படி, இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்புக்களில் கண்காணிப்புக் குழுவும் ஒன்று. பாதிக்கச் செய்ததரப்பு புலிகள்.

ஆகவே, இந்தப் பிணக்கில் கண்காணிப்புக் குழுவும் ஒரு தரப்பாக - கட்சியாக - உள்ளது. இத்தகைய விடயத்தில் ஒரு முடிவை - தீர்ப்பை - அறிவக்க முன்னர் ஒன்றுக்கு இரண்டு தடவை தன்னுடைய செயற்பாட்டின் சரி, பிழையை - தனக்கு முன்வைக்கப்பட்டுள்ள சான்றுகள், ஆதாரங்கள், தகவல்கள் போன்றவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வது கண்காணிப்புக் குழுத் தலைவரின் கட்டாய கடமையாகின்றது.

"குற்றமிழைத்த எவரும் தமது பக்க நியாயத்தை எடுத்துரைக்க அனுமதிக்கப்படாத நிலையில் - அவரது தரப்பு நியாயத்தை மன்று செவிமடுக்காத நிலையில் - குற்றவாளியாக அறிவிக்கப்படக் கூடாது" - என்பது இயற்கை நீதி; அடிப்படைச் சட்டம்.

இந்தப் பிணக்கில் புலிகள் தரப்பு நியாயம், வாதம் என்ன என்பதை அவர்களது தலைமைத்துவத்திடம் இருந்து கோரிப் பெற்றுக்கொள்ளாமலேயே, அவசரப்பட்டு - ஒரு பக்கச்சார்பாக நடந்து - தனது முடிவை கண்காணிப்புக் குழுத் தலைவர் அறிவித்துவிட்டார் என்றே கருதத் தோன்றுகின்றது.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் இவ்விடயம் குறித்து வரைந்த கடிதம் தமது கைக்குக் கிடைக்க முன்னரே - சம்பவம் நடந்து இருபது மணி நேரத்துக்குள்ளேயே - புலிகள் மீது குற்றம் சுமத்தும் வகையில் வெளியான கண்காணிப்புக் குழுத் தலைவரின் அறிக்கையும் -

சம்பவம் குறித்து புலிகளின் விளக்கத்தில் காணப்படும் பல அம்சங்கள், விடயங்கள் குறித்து கண்காணிப்புக் குழுத் தலைவரின் அறிக்கையில் ஏதும் பிரஸ்தாபிக்கப்படாதமையும் - இதனை உறுதிப்படுத்துகின்றன.

இத்தகைய போக்கு கண்காணிப்புக் குழுவின் செயற்பாட்டுக்கு உகந்ததல்ல.

"நீதி, நிலை நாட்டப்படுவது மட்டுமன்றி நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்" - என்ற நீதித்துறை வாக்கியத்தையும் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

# 'ஐஸ்' உற்பத்தி நிலையத்தை மீண்டும் இயக்க நடவடிக்கை

## மீனவர் சமாசம் மேற்கொள்கிறது

யாழ்ப்பாண்,ஜூலை16

மீன் பதனிடப் பயன்படும் 'ஐஸ்' உற்பத்தி நிலையத்தினை மீண்டும் இயக்குவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசம் மேற்கொண்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள மேற்படி நிலையத்துக்குச் சொந்தமான கட்டடங்கள் யுத்த நடவடிக்கைகளின்போது பலத்த சேதமடைந்துள்ளன.

தற்போது அதனை மீண்டும் புனரமைக்க புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சினால் 70 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் -

புனரமைப்பு வேலைகளை உடன் ஆரம்பிக்க பாதுகாப்பு அமைச்சின் அனுமதி உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை என்றும் -

அனுமதி கிடைத்தவுடன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 6 மாதங்களில் தொழிற்சாலையை மீண்டும் இயக்கமுடியும் என்றும் -

கடற்றொழிலாளர் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி நிலையம் மீண்டும் இயங்கத் தொடங்குமானால் பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடியதாக இருக்கும் என்றும் -

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-180)

## சங்கானை - சாவகச்சேரி பஸ் சேவையை ஆரம்பிக்குக!

### மக்கள் கோரிக்கை

வலி.வடக்கு,ஜூலை16

சாவகச்சேரிக்கும் சங்கானைக்கும் இடையே வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நடத்தப்பட்டுவந்த பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரியுள்ளனர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் சாவகச்சேரிக்கும் சங்கானைக்கும் இடையே மூன்று சேவைகள் காலை, மதியம், மாலையென கடந்த காலங்களில் நடத்தப்பட்டுவந்தன. இந்தச் சேவைகள் மூலம் சாவகச்சேரி - சங்கானை இடையே போக்குவரத்தை மேற்கொண்ட வியாபாரிகள், அரசு அலுவலர்கள் போன்றோர் நன்மை அடைந்து வந்தார்கள்.

ஆனால், தற்போது இச்சேவை இடைநிறுத்தப்பட்டமையால் மக்கள் போக்குவரத்துச் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். (ஒ-86)

## தமிழ்த்தினப் போட்டியில் மாணவர் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை16

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்தினப் போட்டி முடிவுகளால் அதிருப்தியுற்ற பாடசாலை மாணவர்கள் சிலர், போட்டி நடுவர்களை மண்டபத்தைவிட்டு வெளியேறவிடாது தடுத்துநிறுத்தி ஆர்ப்பாட்டம் செய்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட நடுவர் ஒருவர் பாரபட்சமாக நடுவர் பணியை மேற்கொண்டதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பாக வலயக் கல்வி அலுவலகத்திலும் தாம் முறையிட்டுள்ளதாக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## பனை அழிப்பைக் கண்டித்து

# தென்மராட்சி மேற்கு மக்கள் ஒன்றுதிரண்டு கண்டனப் பேரணி

### நேற்றுமுன்தினம் நடத்தினர்

தென்மராட்சியில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் பனை அழிப்பைக் கண்டித்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மக்கள் பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.,

நாவற்குழி, தச்சன்தோப்பு, கோவிலாக்கண்டி, வேம்பிராய் பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களே நூற்றுக்கணக்கில் ஒன்றுதிரண்டு மேற்படி பேரணியை நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் ஒன்றுகூடிய மக்கள், அங்கு மளக்குடியமர்நத மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட பலரும் தமது பகுதிகளில் உள்ள பனை மரங்கள் படையினரால் தறிக்கப்பட்டு எடுத்துச்செல்லப்படுகின்றன எனத் தெரிவித்தனர். ஒரு சில தினங்களில் நூற்றுக்கணக்கில் பனைமரங்கள் தறிக்கப்படுவதாகவும் கவலைவெளியிட்டனர்.

இதனையடுத்து, பனை மரங்கள் அழிக்கப்படுவது குறித்து படைத்தரப்பினருடன் கலந்துரையாட குழு ஒன்றும் நியமனம் செய்யப்பட்டது.

பின்னர் மாலை 5 மணியளவில் கோவிலாக்கண்டியில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட மக்கள், நாவற்குழிப் பகுதியில் உள்ள இராணுவமுகாமை வந்தடைந்து படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர்.

பனை அழிப்புக் குறித்து உடன் உரியநடவடிக்கை எடுக்கப்படும் எனப் பேரணியில் கலந்துகொண்டோரிடம் படையினர் உறுதியளித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## படையினர் தொடர்ந்து பனைகளைத் தறிப்பு

### பொதுமக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை16

தென்மராட்சி, கொழும்புத்துறைப் பகுதிகளில் தொடர்ந்தும் பனை மரங்கள் தறிக்கப்படுவதாகப் பொதுமக்கள் பனை அபிவிருத்திச் சபைக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியான கைதடி, கொடிகாமம் பகுதிகளிலும் கொழும்புத்துறைப் பகுதியிலும் உள்ள காணிகளில் இருந்த பனைகள் வெட்டப்படுவதாக அப்பகுதிப் பொதுமக்கள் பனை அபிவிருத்திச் சபைக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இத்தகைய பல முறைப்பாடுகள் நாளாந்தம் தமது அலுவலகத்திற்கு பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டவண்ணம் உள்ளதாக பனை அபிவிருத்திச் சபை அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் பனைகள் வெட்டப்படுவது தொடர்பாக தென்மராட்சிப் படை அதிகாரிகளுடன் பனை அபிவிருத்திச் சபைப் பிரதிநிதிகள் பேச்சு நடத்தியதாகவும் -

அப்போது அப்பகுதி படை அதிகாரி மேலும் இதுபோன்று நடைபெறாது என உறுதி யளித்ததாகவும் -

ஆனால், அப்பகுதியில் மீண்டும் பனைகள் வெட்டப்படுவது மிகவும் கவலைக்குரியது என்றும் -

அந்த அலுவலர் மேலும் தெரிவித்தார். (ஒ-180)

**நாளை**

ஆடி 01
புதன்கிழமை
(17.07.2002)
திதி : அட்டமி
முன் இரவு 11.53 வரை.
நட்சத்திரம்: சித்திரை
முன் இரவு 11.33 வரை
[illegible] : 4.30 - 6.00
ராகுகாலம் : 12.00 - 1.30
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

சத்தியம் என்னும் திருக்கோயிலை அடைய விரும்புவோர் [illegible] என் [illegible] இயங்க வேண்டும்.

## தீயணைப்புப் படைக்கு மேலதிக பயிற்சிகள்

யாழ்.மாநகரசபையின் தீயணைப்புப் படையினருக்கு மேலதிக பயிற்சிகளை வழங்கவென கொழும்பு மாநகரசபையின் இரு அதிகாரிகள் விரைவில் இங்கு வரவுள்ளனர்.

இது தொடர்பான உறுதிமொழியை அண்மையில் கொழும்பு சென்றுவந்த யாழ்.மாநகர முதல்வரிடம் கொழும்பு மாநகரசபை முதல்வர் வழங்கியுள்ளார்.

இவ்வாறு வருகை தரவுள்ள அதிகாரிகளுக்கான உணவு மற்றும் தங்குமிட வசதிகளை ஏற்று யாழ்.மாநகரசபை பொறுப்பேற்கவுள்ளதாகவும் -

அவர்களுக்கான பிரயாணப்படி மற்றும் கொடுப்பனவுகள் என்பவற்றை கொழும்பு மாநகரசபையே பொறுப்பேற்கும் என்றும் மாநகரசபை முதல்வர் செ.கந்தையன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பயிற்சியை வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் யாழ்.மாநகரசபையின் தீயணைப்புப் படையின் செயற்பாடுகள் யாவும் விஸ்திரிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10)

### சுமார் 20 ஆண்டுகளின் பின்னர்

## நில அளவை திணைக்களத்தில் வரைபடங்கள் விநியோகம்

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னதாக யாழ்.மாவட்ட நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை வரைபடங்கள் விநியோகிக்கப்பட்டுவருவதாக திணைக்கள ஆணையாளர் எஸ்.சிவதாஸன் தெரிவித்துள்ளார்.

இவ்வரைபடங்கள் தேவைப்படும் பாடசாலைகள் மற்றும் தனியார்கள் பிரதி புதன்கிழமையும் அலுவலக நேரத்தில் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாதுகாப்பு காரணங்களுக்காக யாழ்.மாவட்ட நில அளவைத் திணைக்களத்தினால் அளவை வரைபடங்கள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது.

இதனால் நில அளவை மற்றும் அது தொடர்பான கற்கை நெறிகளை மேற்கொண்ட மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

தற்போது, சுமார் 20 வருட காலத்தின் பின்னர் மீண்டும் நில அளவை வரைபடங்கள் யாழ்.மாவட்ட திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பெருந் தெருக்களின் அளவைப் படங்கள் உட்பட பல்வேறு அளவைப் படங்களையும் தற்போது பெற்றுக்கொள்ள முடியுமென திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார். (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றத்தில் பலத்தை அதிகரிக்க

# எதிர்க்கட்சி உறுப்பினர்களை தம்பக்கம் இழுக்கும் அமைச்சர்

நாடாளுமன்றத்தில் ஐ.தே.முன்னணியின் பலத்தை அதிகரிப்பதற்காக தென்மாகாணத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசி அவர்களைத் தம்பக்கம் இழுத்து வருவதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் தமது அங்கத்துவத்தை இழக்காமல், கட்சிமாறுவதற்கு இடமளிக்க வகைசெய்யும் சட்டநகல் குறித்து ஒரு தெளிவில்லாத நிலையே இருந்துவருகிறது. ஆயினும், தென்மாகாணத்தைச் சேர்ந்த அரசுத்தரப்பு அமைச்சர் ஒருவர் எதிர்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்சிமாறச் செய்யும விதத்தில் அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுவருவதாகக் கூறபபடுகிறது.

மேற்படி நகல் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அரசுக்குத் தேவைப்படுகிறது.

அதனைப் பெறுவதற்கு தமக்குத் தேவைப்படும் மேலதிகமான 22 ஆசனங்களையும் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து இலகுவாகப் பெறமுடியும் என்று ஐ.தே.மு. கூறிக்கொள்கிறது.

சமீபத்திய நிலைமைகளின் படி அக்குறை நிரப்புநிலைமையை அரசால் சமாளிக்கமுடியுமா என்பது சந்தேகமாக உள்ளது.

இருந்தாலும் கூட பொ.ஐ.முன்னணியிலிருந்து சில பெரும் புள்ளிகளை ஐ.தே.மு. அரசு தன்பக்கம் இழுத்துள்ளதாகவும் -

அவர்கள் சரியான சந்தர்ப்பத்தில் அமைச்சர்களாகப் பதவி கிடைகக்ப் பெற்று அரசுடன் இணைந்து கொள்வார்களென்றும்-நம்பப்படுகிறது.

ரவூப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியில் தொடர்வதற்கு கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது பலத்த எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் ஹக்கீம் மேற்படி சட்டநகலுக்கு ஆதரவளிக்கச் சற்றுப பின்னடிப்பதாகக் கூறப்படுகிறது. தமது பதவிகளை இழக்காதவகையில் முஸலிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் தனக்கு எதிராகச் செயற்பட சந்தர்ப்பம் வழங்கபபடுமாயின் அது தனக்கு ஆபத்தாக முடியும் என்று ஹக்கீம் சிந்திப்பதாகக கூறப்படுகிறது. இதனாலேயே கட்சி மாறி வாக்களிக்க வகைசெய்யும் சட்டமூலத்துக்கு அவர் ஆதரவளிக்க தற்போது தயங்கிவருகிறார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில நாடாளுமன்றம் ஜனாதிபதியால் எந்நேரமும் கலைக்கப்படலாம் என்ற நிலை வேறு உள்ளது.

இதனைத் தடுப்பதாயின் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். இதற்கான சட்டமூலத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு அரசுக்குத் தேவை. தற்போதைய நிலையில் 22 பேரை எதிர்த்தரப்பில் இருந்து தம் பக்கம் இழுப்பதே அரசுக்குள்ள இலகுவானவழி என்று கருதப்படுகிறது.

அதனாலேயே தென்மாகாணத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட அமைச்சர் எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசுக்கு ஆதரவாக மாற்றும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார் என்று அந்த இணையத் தளச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# பாதீனியம் செடிகள் சங்கானையில் அழிப்பு

யாழ்மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன், சங்கானை தெற்கு, மேற்கு விவசாய சம்மேளன அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் சேர்ந்து சங்கானைப் பகுதியில் பாதீனியச் செடியைக் கடந்த வெள்ளிக்கிழமை அழித்தனர்.

சங்கானையில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த கட்டடங்களுக்கருகில் உள்ள காணிகளில் இச்செடி அதிகம் வளர்ந்துள்ளது. சங்கானை மண்டிகைக்குளம் மற்றும் இதனை அண்டியுள்ள பிரதான வீதிக்கருகில் உள்ள காணிகளில் இச்செடி கூடுதலாக வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சென்றவருடம் இதேபோன்ற முயற்சி இப்பகுதியில் எடுக்கப்பட்ட போதும் இச்செடியின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தமுடியாமலுள்ளதாக விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-29)

## நிவாரண விநியோகம்

சண்டிலிப்பாய்,ஜூலை16

சண்டிலிப்பாய் (வலி.தென்மேற்கு) பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் இடம்பெயர்ந்தோருக்கான ஜூன் மாதத்திற்கான இலவச உலர் உணவு நிவாரணம் 104A, B புள்ளிகளுக்கு இவ்வாரம் தொடக்கம் விநியோகிக்கப்படவுள்ளது. பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம் ஆகியன தமது கிளைகளுக்கு ஊடாக இந்த உலர் உணவு நிவாரணப் பொருள்களை நேற்று திங்கட்கிழமை தொடக்கம் வழங்கிவருகின்றன. (ஒ-135)


**ரூபா 5,00,000**

மாதச்சம்பளமாக பிறதேசத்தில் உழைக்கும் திறமையும் தகுதியும் பெற A/L ...க்தவர்களாயிருக்க வேண்டும். மூன்று வருடப் பயிற்சி, 24 சோதனைகள். செலவு 41/2 லட்சம். தொடர்பு: (5030)

**திருஞானாஸ் கட்டடம்**

மத்திய பேருந்து நிலைய முன்பாக

141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.






**D'cold**

D'cold Balm, D'cold Inhaler & D'cold Cough Drops

ஜலதோசம், மூக்கடைப்பு, தொண்டை கரகரப்பு, தலைப்பாரம், தலைவலி ஆகியவற்றுக்கு உடனடி நிவாரணம்.

**D'cold** சுகமான வாழ்வுக்கு...

ஏக விநியோகஸ்தர்:~ JEGHAN PHARMACY

NO.462/B, HOSPITAL ROAD, JAFFNA. TEL.021-2194, 3191

சந்தைப்படுத்துவோர் PHARMCO MARKETING SERVICES (PVT) LTD. (C/22936)


## சட்டத்தரணி அறிவித்தல்

இதுவரை காலமும் கிளிநொச்சியில் இயங்கிவந்த எனது செயலகம் மீண்டும் உரும்பிராயில் பழைய இடத்தில் இயங்குகிறது என்பதை எனது கட்சியாளர்களுக்கு அறியத்தருகின்றேன். என்னிடம் ஒப்படைக்கப்பட்ட உறுதிகளையும், ஆவணங்களையும் கிழமை நாள்களில் (வெள்ளிக்கிழமை தவிர) பிற்பகல் 4 மணிதொடக்கம் 6 மணிவரை பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறியத்தருகின்றேன்.

**க.சிவசுப்பிரமணியம்,** பீ.ஏ., எல்.எல்.பீ.,
சட்டத்தரணி, நொத்தாரிசு,
ஊரெழு.

(6025)

## நெஞ்சகலா நினைவஞ்சலி

| 42ஆம் ஆண்டு | 12ஆம் ஆண்டு |
|---|---|
| தோற்றம் 22 – 07 – 1913 / மறைவு 02 – 07 – 1960 | தோற்றம் 23 – 08 – 1920 / மறைவு 01 – 07 – 1990 |



**அமரர் நாகலிங்கம் திருஞானசம்பந்தர்**
(முன்னாள் ஆசிரியர்,
மீசாலை வீரசிங்கம் சைவ வித்தியாசாலை)



**திருமதி திருஞானசம்பந்தர் யோகாம்பிகை**
(இளைப்பாறிய ஆசிரியை,
மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

திதி: 16.07.2002

உங்களை நாம் என்றென்றும் நினைவு கூருவோம்.

தங்களின் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

மீசாலை. (C/22941)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் க.கந்தசாமி

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், ஆவரங்காலினை வசிப்பிடமாகவும்கொண்ட எங்கள் குடும்பத் தலைவர் **அமரர் க.கந்தசாமி** அவர்களின் 31ஆம் நாள் கிரியைகள் இன்று (16.07.2002) செவ்வாய்க்கிழமை பம்பலப்பிட்டி மாடி வீட்டுத் தொடரில் உள்ள சமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம். அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு சகல வழிகளிலும் எமக்கு ஒததாசைபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் தமது அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

*31A, மல்வத்த வீதி,*
*தெகிவளை.* (5844)

குடும்பத்தினர்.


**க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு** குடும்பமாக பரிசுகளை வெல்லுங்கள்

க்லோகாட் ரயிலுடன் இன்றே இணையுங்கள்



க்லோகாட் மூலம் உங்கள் குடும்பத்தினர் அனைவரும் பரிசுகளை வெல்ல இதோ ஓர் நல்ல சந்தர்ப்பம்

முதலாவது அதிர்ஷ்டமடையும் குடும்பத்திற்கு

இரண்டாவதாக அதிர்ஷ்டமடையும் மூன்று குடும்பங்களுக்கு மூன்று பரிசுகள்

21" கலர் தொலைக்காட்சி, ..., VCD பிளேயர் ஒன்று

விற்பனையாளர்களுக்கும் பரிசு

ஆறுதல் பரிசுகள்

100 ஆறுதல் பரிசுகளாக ... வழங்கும் 100 பரிசுப் பொதிகள்

முதலாவதாக அனுப்பிவைப்போருக்கு

முதலாவதாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைப்போரில், 650 பெயர்களுக்கும் ...

உங்கள் விண்ணப்பப்படிவங்களை ஜூலை 19ம் திகதி 2002 இக்கு முன் அனுப்பிவையுங்கள்

க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு - த. பெ. இல. 911 கொழும்பு

க்லோகாட்

(C/22945) Mesters DCB LN: C/38/2002


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்ச் சூழலில் மரணித்த நீதிக்கு புத்துயிர் கொடுக்கும் நடவடிக்கை

## சட்டத்தரணிகள் சங்க இலவச சட்ட உதவிகள்

வடக்கு - கிழக்கின் போரானது, தவிர்க்கமுடியாதபடி, ஒருபுறத்தில் அரசியல் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ள அதேவேளையில், இடப்பெயாவுகளையும், தொழிலற்ற நிலையையும், சமூகப் பிரச்சினைகளையும், மனித உரிமை மீறல்களையும் மறுபுறத்தில் உருவாக்கியுள்ளது. போரினபோது, முதலில் கொல்லப்படுவது நீதி என்பர். இதற்கு வடக்கு - கிழககு எந்த வகையிலும் விதிவிலக்கல்ல.

1996ஆம் ஆண்டில் யாழ்.குடாவில் அரச நீதி மன்றங்கள் மீண்டும் செயற்பட ஆரம்பிக்கப்பட்டபோதும், போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெறுவதில் இலவச சட்ட உதவிகள் கிடைக்கப்பெற்றமை மிகமிகக் குறைவென்றே கூறவேண்டும். யாழ்.குடாவின் சில சட்டத்தரணிகள், பாதிக்கப்பட்டோரின் நிலையை உணர்ந்து, குறிப்பிட்ட சிறு எண்ணிக்கையானவர்களுக்குத் தனிப்பட்டரீதியாக இலவசமாகவும், சொற்ப பணத்துடனும் சட்ட உதவிகளை வழங்கிவந்தனர். சுய தொழிலில் ஈடுபடும் தொழிற்துறையாளர்களுள், சட்டத்தரணிகள் போரினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த போதும், அவர்களுக்கு அரசோ அல்லது தென்னிலங்கை சர்வதேச அமைப்புகளோ எந்தவித உதவிகளையும் வழங்காது விட்ட போதும், மனிதநேய அடிப்படையில, யாழ்குடாவின் சட்டத்தரணிகள் சிலர், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சட்ட உதவிகளைச் செய்து வந்துள்ளனர்; இன்றும் செய்துவருகின்றனர்.

ஆனால், 2001ஆம் ஆண்டிலிருந்து, போரினால் பாதிக்கப்பட்டோர்களுக்கான சட்ட உதவிகள் உள்நாட்டு, சர்வதேச அமைப்புகளாள் வடக்கு - கிழக்கிற்கும் பெருமளவில் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கமானது, சட்ட உதவி மன்றம் (Legal Aid Foundation) என்ற அமைப்பினை உருவாக்கி, தாமாகத் தனித்தும், உள்ளூர், சர்வதேச அமைப்புகளுடன் இணைந்தும் பலதரப்பட்ட இலங்கைப் பிரஜைகளுக்கு இலவசமாகச் சட்ட உதவிகளைச் செய்யும் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் மிகவும் அண்மைக்காலங்களிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்திற்கும விஸ்தரிக்கப்பட்டு உள்ளன. இப்படி நடைமுறைபடுத்தப்பட்டுவரும் உதவித்திட்டங்கள் பின்வருமாறு:-

1.வறியவர்களுக்கான சட்ட உதவி ( Legal Aid for Poor Citizens).

2.உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான சட்ட உதவி (Legal Aid for Internally displaced People).

3.மனித உரிமை மீறலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சட்ட உதவி (Legal Aid for Victims of Human Rights Violations).

4.குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டோர்களுக்கான சட்ட உதவி (Legal Aid for Victims of Crime).

5.முதியோர்களுக்கான சட்ட உதவி ( Legal Aid for Elders).

இந்தச் சட்ட உதவித் திட்டங்கள ஒவ்வொன்றும் பற்றிய விவரங்களும் பின்வருமாறு:-

**1. வறியவர்களுக்கான சட்ட உதவித் திட்டம்:-**

இத்திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் பராமரிப்பு, விவாகரத்து, விபத்தினால் மரணமடைந்தவர்கள் அல்லது காயம் அடைந்தவர்கள் தொடாபில் தாக்கல் செய்யப்படும் நட்டஈட்டுக்



கான வழக்குகள் போன்றவை இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் உதவி பெற விரும்புவோர்கள், தங்களது 'இ' அட்டையுடன் வரவேண்டும்.

**2. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான சட்ட உதவித் திட்டம்:-**

இந்தச் சட்ட உதவித் திட்டத்தின் கீழ, இடம்பெயர்ந்து வாழ்பவர்களுக்கும், அண்மைக்காலங்களில் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறியவர்களுக்கும பின்வரும் விடயங்கள் தொடர்பாக இலவச சட்ட உதவிகளும், சட்ட ஆலோசனைகளும் வழங்கப்படும்.

☆கல்வி கற்பதற்கான உரிமைப் பிரச்சினை.

☆தொழில்செய்யும் உரிமை தொடர்பான பிரச்சினைகள்.

☆தாபரிப்பு, விவாகரத்து.

☆இடம்பெயர்ந்ததைத் தொடர்நது எழும் சொத்துரிமைப் பிரச்சினைகள்.

☆நடமாட்டச் சுதந்திரம் தொடர்பாக எழும் பிரச்சினைகள்.

☆பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டை பெறும் பிரச்சினைகள்.

☆மற்றும் உரிமைப் பிரச்சினைகள் (தடுப்புக் காவல், காணாமற் போதல் போன்றவை).

**3. மனித உரிமை மீறலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சட்ட உதவித் திட்டம்:-**

அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொது அலுவலகர் ஒருவர், உ+ம்: கிராம அலுவலகர், பொலீஸ், உதவி அரசாங்க அதிபர், கல்வி அதிகாரிகள், சுகாதார அதிகாரி..., உங்களுக்குச் செய்யவேண்டிய ஒன்றைச் செய்தமையூடாகவோ அல்லது செய்யாதமையூடாகவோ உங்களது உரிமை பாதிக்கப்பட்டால், அரசியலமைப்பினால் (Constitution) வழங்கப்பட்டுள்ள உத்தரவாதத்தின் கீழ், நீங்கள் அதற்கான நிவாரணத்தைக் கோரமுடியும்.

கைது, தடுத்துவைப்பு, துன்புறுத்தல் போன்ற மனித உரிமை மீறல்களுக்கும், நீங்கள் நிவாரணத்தைக் கோரமுடியும்.

இலங்கைப் பிரஜையான உங்களை, உங்கள் இனம், மதம், குலம், மொழி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம என்பவைகளினடிப்படையில் பாரபட்சப்படுத்துவது அடிப்படை உரிமை மீறலாகும்.

நீங்கள் ஒரு பகிரங்க உத்தியோகத்தர் (Public Servant) ஆயின், உங்களின் பதவி உயர்வு, இடமாற்றம், சம்பள உயர்வு, ஓய்வூதியம் அல்லது சேவை நலம் தொடர்பில் உங்கள் தொழில்வழங்குநர் அல்லது அதிகாரி உங்களை ஏதேனும் அடிப்படையில் பாரபட்சப்படுத்தினால், அது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

**செல்வி சாந்தா அபிமன்னசிங்கம்**
(சட்டத்தரணி)
யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்.

எல்லாத் தகுதிகளும் இருந்தும், உங்களது பிள்ளைகளை உங்கள் வதிவிடத்திற்கு அருகிலுள்ள பாடசாலையில் ஆண்டு ஒன்றிற்குச் சேர்க்க மறுப்பின் அதுவும் அடிப்படை உரிமை மீறலே.

நீங்கள் பாதிக்கப்பட்டால் செய்யக் கூடியவை எவை?

குறிப்பிட்ட உரிமை மீறல் நடைபெற்று 30 நாள்களுக்குள், எழுத்து மூலம் கௌரவ பிரதம நீதியரசருககு மனுச் செய்யலாம். 30நாள்கள் கழிநது விட்டால், தலைவர், மனித உரிமை ஆணைக்குழுவுக்கு மனுச்செய்யலாம்.

உங்களின் உரிமை ஏதேனும் பொதுச்செயல்களினால் (Executive/ Administrative acts of Public Servants) மீறப்பட்டால், அது தொடர்பில் நாடாளுமன்றத்திற்கான

(9ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டணி மாநாடு கூட்டப்படுமா?

## ஜனநாயகம் பேணும்படி ஆதரவாளர் கோரிக்கை

ஒரு கட்சி அல்லது அமைப்பு தன்னை பலப்படுத்திக்கொள்ளவும், அதன் ஜனநாயகப் பண்புகளை நிலைநிறுத்திக்கொள்ளவும் மாநாடுகள் வழியேற்படுத்துகின்றன.

தமது ஆதரவாளர்கள் மற்றும் மக்களின் எண்ண ஓட்டங்களை நாடி பிடித்துப்பார்க்கும் நிகழ்வுகளாகவே மாநாடுகள் கருதப்படுகின்றன.

இதனால்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி நீண்ட நெடுங்காலமாகக் கட்சி மாநாட்டை நடத்தாதது அக்கட்சியில் தொடக்ககால உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இடையே கவலையை ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டைக் கூட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்கும்படி பல கோரிக்கைகள் எழுப்பப்பட்ட போதிலும், இதுவரை அதற்கான எந்தவிதமான முன்னேற்பாடும் மேற்கொள்ளப்படவில்லையென அவர்கள் அதிருப்திப்படுகின்றார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாடு இறுதியாக 1983ஆம் ஆணடு ஜூலை மாதம் 21, 22, 23ஆம் திகதிகளில் மன்னாரில் நடைபெற்றது. அந்தச் சமயத்தில் திருநெல்வேலியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 13இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து நாட்டில் கலவரம் வெடித்தது.

அதன்பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாடு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூட்டப்படாததுடன், பொதுச் சபையும்கூட சீரான முறையில் கூடவில்லை என்றே கருத்து வெளியிடப்படுகிறது.

ஆனாலும், குறிப்பிட்ட காலம்வரை நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருநதவர்கள் கூடி சில முடிவுகளை மேற்கொண்டு வந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலையும், அமைதி இன்மையும் தொடர்ந்தமை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட உயிராபத்துக்கள் போன்ற காரணங்களால் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கிய உறுப்பினாகள் என்று கூறப்பட்டவர்கள் அயல்நாடான இந்தியா அல்லது வெளிநாடுகளுக்குச் சென்றனர். இதனால் பொதுச்சபை கூட அன்று கூட முடியாத நிலைமை காணப்பட்டது.

1983ஆம் ஆண்டு மன்னார் மாநாட்டில் கூட்டணி உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செல்வதில்லை என முடிவெடுக்கப்பட்டது. அதனால் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செல்லவில்லை. ஆனாலும், மாநாட்டு முடிவை மீறி இடையில் நாடாளுமன்றம் சென றனர். பின்னர் செல்வதைக் கைவிட்டனர்.

1989ஆம் ஆண்டு, 94ஆம் ஆணடு, 2000ஆம் ஆண்டு, 2001ஆம் ஆண்டு தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இந்தத் தேர்தல்கள் சம்பந்தப்பட்ட முடிவுகளை ஒருசிலர் மட்டுமே தமக்குள் பேசித் தீர்மானித்தனர்.

அப்போது தேர்தலுக்கு எதிரான எதிர்ப்புக்கள் நிலவியதன் காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளில் பெரும்பாலான ஆதரவாளர்கள் அக்கறை காட்டவில்லை.

குறிப்பாக 1998ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் கூட கூட்டணியின் சார்பில் போட்டியிடுவதற்கு போதிய ஆள்கள் முன்வராமையால் யாழ்.மாநகர சபைக்கும், வலி.வடக்குப் பிரதேச சபைக்கும் மட்டுமே மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அவற்றில் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றியும் பெற்றனர். இறுதியாக நடந்த பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏனைய சில கட்சிகளுடன் இணைந்து கூட்டமைப்பாக தேர்தலில் போட்டியிடுவதை விடுதலைப் புலிகள் எதிர்க்கவில்லை.

இந்நிலைமையைக் கருத்திற் கொண்டு இவ்வாண்டு வடக்கு - கிழக்கில் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்குப் பலர் முண்டியடித்ததுடன் கட்சி விட்டுக் கட்சி தாவக்கூட பட்டியல்களில தமது பெயர்களைத் திணித்துக் கொண்டனர்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் பலர் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட முன்வந்தனர். எப்படியாவது பட்டியலில் இடம பெற்றுவிட வேண்டும் என்பதற்காகக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பின்னணிகளை உருவாக்கி விட்டனர்.

2001ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி தொகுதிவாரியாக கிளைகளைப் புனரமைத்தது.

தொகுதி ரீதியாகக கிளைகள் புனரமைக்கப்பட்டபோதிலும் (மத்திய குழு) பொதுச் சபை உறுப்பினர்கள் என தற்போது கூறப்படுபவர்கள் கிளைகளினால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் என்று கூறமுடியாத நிலைமையே காணப்படுகின்றது. தற்போது பொதுச சபையென்று கூறிக்கொண்டு ஒரு சிலரே எந்த முடிவுகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள் என்று கூட்டணியின் விசுவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமையிலேயே மாநாடு கூட்டப்படவேண்டும் என்ற கோரிக்கை தற்போது வடக்கு - கிழக்கில் இருந்து வலுப்பெற்று வருகின்றது. இக்கோரிககையை பரவலாக முன்னெடுப்பதில் ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்கள கூட உந்து சக்தியாக இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாடு கூட்டப்படவேண்டுமாக இருநதால், பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டியது அத்தியாவசியமாகும்.

ஆவண யாப்பின் பிரகாரம் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக தொகுதிக் கிளைகள் கூட்டப்பட்டு பொதுச் சபை உறுப்பினர் தெரிவுகள் இடம்பெற வேண்டும். மகளிர் அமைப்புகள் உருவாக்கப்பட்டு அதன் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவேண்டும். மற்றும் இளைஞர் பேரவை, மாணவர் பேரவை கூட்டப்பட்டு அவற்றின் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவேண்டும். இவை தவிர கட்சியின் தொழிற்சங்கங்களின பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக தற்போதைய நிலைமையில் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட ஏனைய கூட்டமைப்புக் கட்சிகளான அகில இலங்கை தமிழ்க் காஙகிரஸ் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (சுரேஸ் அணி) ஆகிய மூன்று கட்சிகளுக்கும் தோழமைக் கட்சிகள் என்ற முறையில் பொதுச் சபை அங்கத்துவம் வழங்கப்படவேண்டும்.

1983ஆம் ஆண்டு மன்னாரில் இடம்பெற்ற மாநாட்டில் மறைந்த திருவாளர் வி.பொன்னம்பலத்தின் செந்தமிழர் இயக்கம் என்ற கட்சிக்கு அங்கததுவம் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேசமயம் -

தமிழர் விடுதலைக் கூட்டணியானது தமிழரசுக் கட்சி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் இணைந்தே உருவாக்கப்பட்டுள்ளது (தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் எப்போதோ விடைபெற்றுவிட்டது). இந்நிலைமையில், மீண்டும் ஓர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு எதன் அடிப்படையில் பிரதிநிதித்துவம் வழங்குவது என்ற கேள்வியும் எழுகின்றது.

நவம்

இவையாவற்றையும் சமாளித்து மாநாடு கூட்டப்படுமாக இருந்தால் கட்சியினுடைய சகல பதவிகளுக்கும் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டு, உட்கட்சித் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும்.

இந்நடவடிக்கையை தற்போது கட்சியின் பதவிகளில் இருப்பவர்களில் எத்தனை பேர் மனப்பூர்வமாக விரும்புவார்கள் என்ற கேள்வியும் எழுகிறது.

மாநாட்டைக் கூட்டும்படி கோரிக்கை எழுப்புகின்ற அதேசமயம், மீண்டும் தமிழரசுக் கட்சி கட்டியெழுப்பப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. காரணம் ஏற்கனவே கூட்டணியில் தமிழ் காங்கிரஸ் கட்சி இணைந்துள்ளதாக கூறிக்கொள்ளும் அதேசமயத்தில் தற்பொழுது அக்கட்சி தனித்து இயங்கிவருகின்றது.

தமிழரசுக் கட்சி, கூட்டணி உருவாக்கப்பட்ட பின்னர்கூட மட்டக்களப்பில் காசி ஆனந்தன் தமிழரசுக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டமை குறிப்பிடக்கூடியது. மட்டக்களப்பில் கூட்டணி சார்பில் இராசதுரை போட்டியிட்டு வெற்றி பெற்றபோதிலும், தனக்கு எதிராக தமிழரசுக் கட்சி சார்பில் காசி ஆனந்தன் தேர்தலில் போட்டியிட்டமை காரணமாக கட்சியில் இருந்து பிரிந்துசென்று அரசுடன் சேர்ந்து கொண்டமை நினைவு கூரத்தக்கதே.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்சி மாநாடு இன்னும் ஒரு சில மாதங்களில் கட்சி தலைமையில் உள்ளவர்களினால் கூட்டுவதற்கு வேண்டிய முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். இல்லையேல், தமிழரசுக் கட்சி புத்துயிர் பெறுவதன்மூலம் கூட்டணியின் ஒரு பகுதியினர் பிரிந்து செல்வது தவிர்க்க முடியாததாகிவிடும் என்று கூட்டணி வட்டாரங்களிலேயே பேச்சு அடிபடுகிறது.

மக்கள் மத்தியில் ஒற்றுமை பற்றி பேசிக்கொள்ளும் தலைவர்களிடையே வேறுபாடுகள், போட்டிகள், விட்டுக்கொடாமை, அடுத்தவர்களை மதிக்காமை, ஜனநாயகப் பண்புகளை உதாசீனப்படுத்தல் என்பவை மலிந்துவிட்டதாக கூட்டணி விசுவாசிகள் வேதனையுடன் சொல்கிறார்கள்.

இனியும் அந்தத் தலைவர்கள் பொதுநல அடிப்படையில் இணைந்து, ஜனநாயகப் பண்புகளை மதிதது, கூட்டணியை வழிநடத்த முற்படவேண்டும்.

இல்லாவிட்டால், மக்களால் தூக்கியெறியப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை என்கிறார் அன்று 'இரத்தப்பொட்டு' வைத்த ஒருவர். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Panasonic T.V 21", Soney 2093, Soney 2092 மற்றும் National 1480 என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கைலாயநாதன் முரளிதரன், ஆடியபாதவீதி, திருநெல்வேலி கிழக்கு, (கல்வியங்காடு சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (6012)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. (1Kg-150/-) தினமும் சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய்.(6003)

### தவறிவிட்டது

2ஆம் ஒழுங்கை, உடுவில் றோட், மானிப்பாயைச் சேர்ந்த தங்கராஜா பகிரா என்பவரது தேசிய அடையாள அட்டை, பாஸ்போர்ட், லண்டனில் தொழில் பார்த்த (பைனான்சியல்) அ.அட்டை இன்னும் சில ஆவணங்களும் பேர்ஸுடன் கலட்டி அம்மன் கோயிலுக்கும் நாவலர் வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள 572/7, கலட்டி அம்மன் கோயில் வீதி, கலட்டி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (6020)

வசாவிளான் தெற்கு, வசாவிளானைச் சேர்ந்த சந்திரசேகரம் கமலீராஜ் என்பவரின் தே.அ.அ. (8201031475V), வி.அ.அ (0907027012) என்பன உரும்பிராய்க்கும், ஒஸ்கோ லேனுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வசாவிளான் தெற்கு, குட்டியப்புலம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (6022)

### வீடற்றவன்

'வீடற்றவன்' நாவலின் விளக்கமும் விமர்சனமும் க.பொ.த மாணவர்கள் தமிழ் இலக்கியம் கற்கப் பயன்படும். எல்லாவகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. விலை ரூபா 25.00 (6000)

### காணவில்லை

19/1, ஈச்சமோட்டையில் வசிக்கும் அன்ரன் என்பவரது மாவெள்ளை நிறமுடைய பசு மாட்டை 13.07.2002 சனிக்கிழமைமுதல் காணவில்லை. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: தோ.அன்ரன் 19/1, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6026)

### சென்.ஜோன் அம்புலன்ஸ் பாசறை திருமலையில்

யாழ்ப்பாணம்,ஜூலை16

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியின் தேசிய பாசறை இவ்வாண்டு திருகோணமலை மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் பல பாகங்களையும் சேர்ந்த சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மற்றும் கடேற் அம்புலன்ஸ் உறுப்பினர்கள் இப்பாசறையில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்பாசறையில் கலந்துகொள்ள விரும்பும் உறுப்பினர்களை நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு வைத்தீஸ்வரா கல்லூரிக்கு சமுகம் தருமாறு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ் தெற்கு மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார். (ஒ-9)

## தொடர்பு கொள்ளவும்

நிர்வாக, நிறைவேற்றுப் பணிகளில் (வன்னி மாவட்டம்) வேலையாற்றுவதற்கு விருப்பமுடைய வேலையற்றிருக்கும் பொருளியல் துறை (சிறப்பு, பொது) பட்டதாரிகளை 18.07.2002 வியாழன் காலை 10 மணிமுதல் 12மணிவரையும் வேலையற்றோர பட்டதாரிகள் சங்க அலுவலகத்தில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

*தலைவர்*

**வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்,**
**யாழ்ப்பாணம்.**

15/37, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (6033)

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வரைவுள்ளது

**2000.01.01 தொடக்கம் 2000.12.31ஆம் திகதி வரையுமான கணக்காய்வு மீதிகள் உறுதிப்படுத்தல்**

மேற்படி காலத்திற்கான கணக்காய்வு என்னால் மேற்கொள்ளப்பட இருப்பதால் சங்கத்தில் கொடுக்கல், வாங்கல் செய்தோர் கிராமிய வங்கி நடவடிக்கைகள் உட்பட 2000.12.31 ஆம் திகதிக்கான மீதிகளை 2002.07.31ஆம் திகதிக்கு முன் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய வேலை நாள்களில் சங்கத் திற்கு சமுகமளித்து உறுதிப்படுத்தித் தரும்படி இத்தால் அறியத்தருகின்றேன். உரிய திகதிக்குள் உறுதிப்படுத்தத் தவறின் சங்க புத்தக மீதியே சரியானதென ஏற்றுக்கொள்ளப்படும்.

திருமதி வி.யோகேஸ்வரி,
சிரேஷ்ட கணக்காய்வாளர்,
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,யாழ்ப்பாணம்.

2002.07.15 (C/22949)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள, புத்தூர் கமநல சேவை நிலைய இலிகிதா **திரு.வே.பி.சண்முகநாதன்** அவர்களின் அன்புத் தந்தையாரும், திணைக்கள ஊழியா **திரு.ச.தசேந்திரன்** அவர்களின் அன்புப் பேரனுமாகிய

### வேலர் பிள்ளையார்

அவர்கள் 13.07.2002 அன்று காலமான செய்திகேட்டு மிகவும் துயரடைகிறோம். அவரது மறைவால் துய்ருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நலன்புரிச்சங்கம், (6036)
கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 - 02 - 1925

மறைவு 01 - 06 - 1998

### திருமதி நல்லதம்பி புனிதவதி

அன்போடும் பண்போடும் வாழ்ந்தீர்கள்
ஆதரவாய் அரவணைத்து மகிழ்ந்தீர்கள்
இன்றோடு நான்காண்டுகள் மறைந்தே போனாலும்
இதயத்தில் உங்கள் நினைவு இணைந்தே இருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மானிப்பாய் வீதி,*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*

*பிரிவால் துயருறும்:*
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(6030)

## Wattawala Plantations Ltd
## வட்டவளை பிளான்ரேஷன்ஸ் (வ/து)

பரந்த உலகத்திற்கு பிறிமியம் சிலோன் தேயிலையை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் இலங்கையின் முன்னணி பெருந்தோட்ட நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் எம்மிடம் 23 பெருந்தோட்டங்கள் உள்ளன. இவற்றுள் 18 மிகவுயர்ந்த மலைநாட்டின் முதற்தரம் வாய்ந்தவை. ரப்பர் பெருந்தோட்டங்கள் சிலவும் உள்ளன. நாட்டின் ஒரேயொரு பனைஎண்ணெய் தொழிற்சாலையும் உள்ளது. இந்தியாவின் 'டாட்டா ரீ' நிறுவனத்தின் கூட்டு நிறுவனமான வட்டவளை பிளான்ரேஷன்ஸ் இப்பொழுது 'செஸ்ரா' என்னும் வர்த்தகப் பெயரில் வளமூட்டப்பட்ட தேயிலையை சந்தைப்படுத்த ஆரம்பித்துள்ளது. சந்தைப்படுத்தலை விரிவாக்கும் எமது நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று.

**விற்பனை பிரதிநிதிகள் (Sales Representatives):-**

வளமான அறிவு, இங்கிதமான இயல்புகள், பிறருடன் விவகாரங்களை கச்சிதமாக கையாளும் திறன்கள், விற்பனையில் விருப்பார்வம், அணியாகத் தொழிற்படுவதில் நாட்டம் ஆகிய பண்புகளையுடைய இளவயதினர் எமக்குத் தேவை. FMCG விற்பனை அனுபவம் சாதகமாக பரிசீலிக்கப்படும். நல்ல ஆங்கிலம் மற்றும் சிங்களம்/ தமிழ் அறிவு கட்டாயமானது. தகவல் பரிமாற்றத்தில் மிகுந்த திறமையிருத்தல் வேண்டும். க.பொ.த.(சா/த)த்தில் குறைந்தபட்சம் கணிதமும் ஆங்கிலமும் உட்பட ஐந்து திறமைச் சித்திகள் உடைய 20 – 25 வயதினர் விண்ணப்பிக்கலாம். சுகாதார காப்புறுதியுடன் பிற அனுகூலங்கள் உட்பட கனிசமான வருவாயை எதிர்பார்க்க முடியும்.

முழு விபரங்களங்கிய, <u>ஆங்கிலத்தில்</u> நிரப்பப்பட்ட விண்ணப்பத்துடன் அண்மையில் எடுக்கப்பட்ட 'பாஸ்போட்' அளவு நிழற்படப்பிரதியையும் இணைத்து உறவினரல்லாத இரு நடுவர்களின் பெயர்களுடன் விளம்பரத் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

*The Sales Administration Manager,*
Watawala Plantations Ltd.,
4th Floor, Mannapperuma Building,
228/1, Galle Road, Colombo 4.

Zesta Plantation Fresh (C22947)

## 31ஆம் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் 10 - 03 - 1928

மறைவு 16 - 06 - 2002

### அமரர் பொன்னம்பலம் செகராஜசேகரம்

**(செல்வராசா- வர்த்தகர், மண்டைதீவு)**

***எங்களை சீருடனும் சிறப்புடனும் வளர்த்த எங்கள் அன்புத் தெய்வமே!***

*உங்கள்ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது அன்புத் தந்தையாரின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (16.07.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி,*
*இணுவில் தெற்கு, இணுவில்.* (6029)

**- பிள்ளைகள்.**

## நினைவஞ்சலி

**34ஆம்ஆண்டு**



**அமரர் சின்னையா சின்னத்துரை**

(இ.போ.ச. சாரதி)

தோற்றம்
06.11.1915 ⟷ 11.09.1928
மறைவு
02.08.1968 ⟷ 27.07.2001

**ஓராண்டு**



**திருமதி சின்னத்துரை சிவபாக்கியம்**

ஐயா, அம்மா உங்களுடைய ஆத்மா சாந்தியடைய புவனேஸ்வரி அம்பாளை வேண்டுகின்றோம்.

*முத்துக்கிருஷ்ணர் வீதி,*
*சுன்னாகம்.* (6034)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி
### கிருஷ்ணபிள்ளை வள்ளிப்பிள்ளை

பளையைப் பிறப்பிடமாகவும் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை வள்ளிப்பிள்ளை அவர்கள் 15.07.2002 திங்கட்கிழமை மன்னாரில் காலமானார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளை (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் கதிராசி, காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோன்மணி, சரஸ்வதி, தவராசா (கிராம உத்தியோகத்தர்), உலகேஸ்வரி, காலஞ்சென்ற மகேந்திரராஜா, சிவானந்தராஜா (தாதிய உத்தியோகத்தர்-மன்னார்), கமலேஸ்வரி, யோகராசா ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆறுமுகம், பரமநாதன், கோகிலாதேவி (ஆசிரியை யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), லில்லி லம்பேட் (தாதிய உத்தியோகத்தர் - மன்னார்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் D-2, கோவிந்தன் கடைச்சந்தி கிளிநொச்சியிலுள்ள அன்னாரது மகளின் இல்லத்தில் இன்று (16.07.2002) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கிளிநொச்சி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*34,துரைராசா வீதி,*
*யாழ்ப்பாணம்.* (6031)

தகவல்:
கி.தவராசா *(மகன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூனியன் அஷ்யூரன்ஸ் பிரசார நடவடிக்கை!

யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தினர் நாளை புதன்கிழமை முதல் மூன்று தினங்கள் வடமராட்சிப் பிரதேசத்தில், ஆயுள்காப்புறுதி மற்றும் பொதுக்காப்புறுதி தொடர்பான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக மேற்படி நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பருத்தித்துறையில் நாளை புதன்கிழமையும், நெல்லியடியில் மறுநாள் வியாழக்கிழமையும், அச்சுவேலியில் எதிர்வரும் 19ஆம் திகதியும் இப்பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.(ஒ-9)

# போர்ச் சூழலில்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாக ஆணையாளருக்கு (Parliamentary Commissioner) விண்ணப்பிக்கலாம்.

இவைதொடர்பான விடயங்கள் சட்டங்களுக்கிணங்க மேற்கொள்ளப்படவேண்டியதால், மேலதிக விவரங்களுக்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருடன தொடர்புகொள்ளவும்.

**4. குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டோருக்கான சட்ட உதவித் திட்டம்:-**

குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டோரின் நலனையும், வழக்கு நடவடிக்கைகளின்போது அவர்கள் கௌரவமாகவும், அனுதாபத்துடனும நடத்தப்படு வதையும் உறுதிப்படுதது வதற்கான சட்ட உதவிகள் இத்திட்டத்தில் வழங்கப்படும்.

பாதிக்கப்பட்டவர் பாரபட்சமின்றியும், கௌரவமாகவும் நடத்தப் படுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளார். மற்றும் தனிப்பட்ட ரகசியம், கீர்த்தி என்பவைகளுக்கான பாதுகாப்பீட்டிற்கும் உரித்துடையவர்.

குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளி அச்சுறுத்தல் மற்றும் ஏனைய விளைவுகளிலிருந்தும் நியாயமான பாதுகாப்பினை பெறுவதற்கான உரிமையுடையவர்.

குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர், சட்டங்களுக்கிணங்க, நீதி மன்றத்தில் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்கும், சாட்சியம் அளிப்பதற்கும், நீதிமன்ற நடவடிக்கைகளை உரியமுறையில் அறிவிக்கப்படுவதற்கும், வழக்கில் அரச சட்டத்தரணிகளைக் கலந்தாலோசிப்பதற்கும், ஆலோசனை பெறுவதற்கும், நட்டஈடு மற்றும் ஏனைய இழப்பீடுகளைப் பெறுவதற்கும் உரிமையுடையவர். மேலும், குற்றவாளியின் மீதான குற்றத்தீர்ப்பு, தண்டனை, சிறைத் தண்டனை மற்றும் விடுவிப்புப் போன்றன தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கும் குற்றவாளி உரிமையுடையவர்.

சட்ட உதவி மன்றமானது மேலே குறிப்பிட்டவைகள் தொடர்பாக ஆலோசனைகளையும், சட்ட உதவிகளையும் வழங்குவதோடு மட்டு மன்றி, குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களது குடும்பம், சாட்சியாளர்களுக்கும் உதவும் அத்துடன், தேவைப்படின், சமூக, மருத்துவ உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு யாழ். மாவட்ட சட்ட உதவி மன்றத்துடன் தொடர்புகொள்ளவும்.

**5. முதியோர்களுக்கான சட்ட உதவித் திட்டம்:-**

அநேக முதியோர்கள் உடல் ரீதியிலும், பணரீதியிலும் பலவீன மானவர்களாக இருப்பதால், அவர்களது உரிமைகள் பெரும்பாலும் மீறப்படுவதைக் காணமுடிகிறது.

அவர்களின் அடிப்படையுரிமைகளை உத்தரவாதப்படுத்த, சட்ட உதவி மன்றம் சட்ட உதவிகளை வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்திவருகிறது.

அநாதரவாக விடப்பட்ட முதியோர்களுக்கு, ஓய்வூதியம், மரண சாதனங்கள், பராமரிப்பு, சொத்திழப்பு, விபத்து, முதியோர்கள் துன்புறுத்தப் படுதல் போன்ற விடயங்கள் தொடர்பாகச் சட்ட உதவி வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கு மத்திய நிதி நிறுவனம் (Central Finance Company Ltd.), கொழும்பு மேற்கு றோட்டறிக் கழகம் (Rotary Club - Colombo West), கனேடிய சர்வதேச அபிவிருத்தி அமைப்பு [Canadian International Development Agency (CIDA)], அகதிகளுக்கான ஐநா. தூதராலயம் [United Nations High Commissioner for Refugees (UNHCR)], இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (Bar Association of Sri Lanka) என்ற அமைப்புகள் உதவுகின்றன.

இந்த ஐந்து திட்டங்களையும், யாழ்ப்பாண மாவட்ட நீதி மன்றத்திற்கருகில் இல: 159, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சட்ட உதவி மன்றம், யாழ். மாவட்ட அமைப்பு நடைமுறைப் படுத்திவருகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைந்துள்ள மேல் நீதி மன்றம், யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை நீதி மன்றங்களில் தொழில்புரியும் பல சட்டத்தரணிகள் இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குவதுடன், தேவைபடின் வழக்குகளையும் இல வசமாக நடத்துவார்கள்.

குறித்த அலுவலகத்தில மாவட்ட ஒருங்கிணைப்பாளருடன் தொடர்பு கொண்டால், இலவச சட்ட உதவி செய்ய முன்வந்திருப்பவர்களில் ஒருவரை உங்களது விடயம் குறித்து உதவிசெய்ய ஒழுங்குகள் செய்யப் படும்.

இச்சட்ட உதவிகள், முற்று முழுதும் இலவசமானவை. எம்மை அணுக, எவரது சிபாரிசும் தேவை யில்லை.

தொலைத்தொடர்புக்கான இலக்கம் மிகவிரைவில் அறியக்கொடுக்கப்படும் அதுவரை, மிக அவசர விடயமாயின், ஒருங்கிணைப்பாளரை 070-212671 என்ற இலக்கத்தில் காலை 8மணிக்கு முன்னரும், மாலை 5 மணிக்குப்பின்னரும் தொடர்பு கொள்ளலாம்.

# நரந்தரத்தீர்வு எட்டப்படும்வரை

# ஈழத்தமிழர்களை வலுக்கட்டாயமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பவேண்டாம்

## கஜேந்திரகுமார் எம்.பி. தமிழக அரசிடம் கோரிக்கை

கொழும்பு,ஜூலை16

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீவு ஏற்படும்வரை தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழகதிகளை வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பவேண்டாம்.

- இவ்வாறு தமிழக அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.ஜீ.கஜேந்திரகுமார்.

இதுகுறித்து அவர் தமிழக அரசுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமாதானச் செயல்முறையில் தற்போதைய நிலைமை தொடர்பாகவும், தமிழர்களைப் பொறுத்தவரையில் இலங்கையில் நிலவுகின்ற ஒட்டுமொத்த நிலைமை தொடர்பாகவும், பழிவாங்கப்படுதல் காரணமாக இலங்கையை விட்டுத் தப்பியோடிய தமிழர்களை இலங்கைக்குத் திரும்பவும் நாடுகடத்தக் கூடிய சாத்தியத்துடன் அவற்றிற்கு நேரடித் தொடர்புள்ளதென எண்ணத் தோன்றுகின்றது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப புலிகளுக்கும் இடையில் சமாதானம் ஆரம்பிப்பதற்குச் சாதகமான சூழலொன்றை உருவாக்கக் கூடியதாக, நாட்டில் சமாதானத்தையும் வழமை நிலையையும் ஏற்படுத்தும் எண்ணத்துடன் இவ்வாண்டு பெப்ரவரியில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செயதுகொண்டனரென்பதை யாவரும் அறிவர்.

இதன்விளைவாக, மோதலில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் அவ்வுடன்படிக்கையின்கீழ் சில கடப்பாடுகளை நிறைவேற்றும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். சமாதானச் செயல்முறை தொடர்பில் படிப்படியான அணுகுமுறையொன்று பின்பற்றப்படுமென சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எனவே, முறையான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு இன்றியமையாத ஒரு காரணி உடன்படிக்கை முழுமையாக அமுல் செய்தலாகும். துரதிர்ஷ்டவசமாக உடன்படிக்கையின் படியான கடப்பாடுகளுக்கு முழுமையாக இணங்கியொழுகுவதற்கு அரச ஆயுதப்படைகள் கூடிய கால அவகாசம் கோருவதனால் சமாதானச் செயல் முறையின் வேகத்தில் ஒரு தளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில், அதிகாரிகளால் தேடப்படுபவர்கள் அவர்களிடம் சரணடைவார்களென்ற நம்பிக்கையில் அவ்வாறு தேடப்படுபவர்களின் உற்றார், உறவினர்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கைதுசெய்து தனிமையில் அடைத்து வைத்துள்ள எண்ணற்ற சந்தர்ப்பங்களும் உள்ளன.

இலங்கைக்கு நாடு கடத்தப்படுபவர்களை விமான நிலையத்தில் வைத்துப் பொலீஸார் கைது செய்கின்றனர். நாடுகடத்தப்படுபவர் அநேக ஆண்டுகளுக்குப் பின்னர் திரும்பிவந்தாலும் கூட வெளிப்பகட்டுக்காகவேனும் அவர்கள் விசாரிக்கப்படுகிறார்கள். நாடு கடத்தப்படுபவர் வேறொரு நாட்டில் அரசியல் தஞ்சம் கோரினாரென்ற ஒரு காரணமே போதும், அவர்கள் இலங்கைக்கு இழிவேற்படுத்த முயற்சித்தாரென்ற பெயரில் அடைத்து வைத்துச் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

எனவே, இலங்கையினுள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களும் நாட்டை விட்டுத் தப்பியோடியவர்களுமான இருசாராரிலும் பெரும்பாலான அகதிகள் ஒன்றில் விமானக் குண்டு வீச்சினாலும், ஏவப்பட்ட ஆட்டிலறி ஷெல்களினாலும் தமது காணி, உடைமைகள் அழிக்கப்பட்டவர்கள் இன்றேல் அரசாங்க ஆயுதப் படைகளினால் 'உயர் பாதுகாப்பு வலயங்கள்' என்ற போர்வையில் தமது காணி, உடைமைகள் பறிக்கப்பட்டவர்கள். இன்றைவரை இக்குடும்பங்களுக்கு அரசு நஷ்டஈடு எதுவும் கொடுக்கவில்லை. பொருளாதாரச் சீரழிவே அதற்குக் காரணமென்று கூறப்படுகின்றது. அதன் விளைவாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக இலங்கைக்குள் இருப்பவர்கள் ஒன்றில் வேறு ஆள்களின் வீடுகளில் குந்தியிருக்கின்றனர் இன்றேல் மிக அவலமான நிலையில் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். இச் சூழ்நிலைகளில் ஏனைய நாடுகளிலிருந்து தமிழ் அகதிகளை இலங்கைக்கு நாடு கடத்துவதானது, நிச்சயமாக மனிதாபிமான நெருக்கடியொன்றை ஏற்படுத்தும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நவீன தொழில்நுட்ப அறிவைப்பெற ஆங்கில மொழி அறிவு அவசியமே!

## பரிசளிப்பு விழாவில் விஞ்ஞான பீடாதிபதி உரை

அசுரவேகத்தில் வளர்ச்சியடைந்து வரும் விஞ்ஞான மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவை எமது மாணவர்கள் சிலரப் பெற்றுக்கொள்வதற்கு ஆங்கிலமொழி அறிவு மிகவும் அவசியமானது.

கடந்த நூற்றாண்டில் எமக்கு ஆளும் மொழியாக விளங்கிய ஆங்கிலத்தை உத்தியோகம் பெறுவதற்காக மட்டுமே அக்காலத்தில் கற்க வேண்டியிருந்தது. ஆனால், தற்போது உலக பொதுமொழி என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ள ஆங்கிலம், வர்த்தகம் போன்ற துறைகளில் ஈடுபவடுவர்களுக்கும் அவசியம் தேவைப்படுகின்றது. ஆகவே, ஆங்கிலத்தை மாணவர்கள் ஆர்வமுடன் கற்கவேண்டும்.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொணடு உரைநிகழ்த்திய யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் எம்.சிவஞான போதம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற மேற்படி விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளான மாணவர்களை டாக்டருக்கு அல்லது பொறியியலாளருக்குப் படிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது நல்லதல்ல. எல்லோரும் டாக்டர்களாகவும், இஞ்சினியர்களாகவும், சட்டத்தரணிகளாகவும் வரமுடிந்தால் நிலைமை என்னாவது என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மாணவர்கள் என்ன துறையில் அதிக நாட்டமும், ஈடுபாடும் கொண்டு கற்கின்றார்களோ அந்தத் துறையை பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும் விஞ்ஞானத்தில் நாட்டமுடையவரை விஞ்ஞானத்திலும், கலைத்துறையில் நாட்டமுடையவரை கலைத்துறையிலும் கற்பதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி விடுவதுடன், தங்கள் கடமை முடிந்து விடும் என்று கருதக்கூடாது. ஒரு மாணவனை அவரது வீடு, பாடசாலை, சமூகம் என்று மூன்றும் வழி நடத்துகின்றன.

பெற்றோர்களும், ஆசிரியர்களும் மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும் என்று அக்கறைப்படுகின்றார்களே தவிர மாணவர்களின் ஒழுக்கம், பண்புடமை ஆகியவை பற்றி அதிக கவனம் செலுத்துவதில்லை.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன் மாதிரியானவர்களாக செயற்பட வேண்டும். வீட்டில் பெற்றோர்களும் மாணவர் படிக்கும் நேரங்களில் தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றை நிறுத்திவைத்து கல்விக்கு ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி.ஏ.என்.கிருஷ்ணவேணி நிறுவுநர் நினைவுப்பேருரையை நிகழ்த்தினார். சங்கானை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். பரிசில்களை திருமதி ராஜினி குமாரவடிவேல் வழங்கினார். (எ-135)

# புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் விடைகள்

நேற்றைய உதயனில் வெளியான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.3 இற்கான விடைகள் வருமாறு:-

**பகுதி I**

1. (2) 2. (1) 3. (3)
4. (4) 5. (2) 6. (4)
7. (3) 8. (3) 9. (2)
10. (3) 11. (2)
12. T - தமிழ், P - உடற்கல்வி
13. B - அழகியல்
14. நிவேதிகா
15. (5) 16. (1) 17. (3)
18. (4) 19. (2) 20. (4)
21. இல்லை 22. ஆம்
23. இல்லை 24. (3) 25. (3)
26. (2) 27. (2) 28. (3)
29. (3) 30. (2) 31. (1)
32. (2) 33. (3) 34. (20)
35. (10) 36. (49) 37. (21)
38. உரம் 39. தாவரபட்சணி
40. கண்காட்சி

**பகுதி II**

1. கொக்கு 2. கல்லில்
3. வெள்ளை
4. வெள்ளை/கொக்கு/மீன்/கோபம்/கல்
5. துள்ளி/வந்து/ஓடி/பாய்ந்து
6. விழுந்த
7. துள்ளித்துள்ளி
8. சினம், வெகுளி
9. தொலைவு, சேய்மை
10. கறுப்பு
11. வந்தது
12. பறக்கின்றது
13. மீன்களைக் கொத்திப் பார்த்தன
14. குஞ்சு
15. பார்த்தது
16. (அ) இஸ்லாமியர்
(ஆ) திருக்குர்ஆன்
(இ) 1. ரம்ழான்
2. ஹஜ்
17. (அ) இந்துக்கள்
(ஆ) வேதசிவாகமம்
(இ) 1. தீபாவளி
2. நவராத்திரி
18. (அ) கிறிஸ்தவர்
(ஆ) பைபிள்
(இ) 1. நத்தார்
2. ஈஸ்டர்
19. (அ) பௌத்தர்கள்
(ஆ) திரிபிடகம்
(இ) 1. வெசாக்
2. பொசன்
20. முன்னால் பாதை வேலை
21. முன்னால் ஒளிச்சமிக்ஞை
22. முன்னால் இடப்பக்க வளைவு
23. முன்னால் பாதசாரி கடவை
24. கிராமியப் பாடல்கள்
25. தாளவாத்தியங்கள்
26. பாட்டு வாத்தியங்கள்
27. பல்லியம்
28. வாத்திய இசை
29. ✗ 30. ✓ 31. ✓
32. ✓ 33. ✗ 34. ✗
35. ✗ 36. ✗ 37. ✗
38. ✓
39. 240km 40. 346km
41. 344km 42. வாயுமூலை
43. பசு 44. கிழக்கு
45. மேற்கு 46. தெற்கு
47. வீடு 48. ஈ
49. தும்பி
50. வெட்டுக்கிளி
51. FLOWERS
52. UMBERLLA
53. VILLAGE
54. GARDEN
55. மரங்கள்
56. மிருகக்காட்சிச்சாலை
57. இரவு
58. வண்ணத்துப்பூச்சி
59. நீர்ச்சில்லு
60. நீரில் இயக்க சக்திமூலம்
61. நீர்மின்சாரத்தை
62. நீரின் வேகத்தைக் கூட்டல் தட்டுக்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
63. அலுமினியம்
64. வேம்பு
65. யூரியா
66. இறப்பர்
67. கண்ணாடி
68. XXIX
69. 1.3, 0.7, 0.5, 0.25
70. 7/8
71. ஐந்து ரூபா
72. [illegible]
73-78 கருத்துடைய வசனங்கள்.

# கீரிமலை செல்லும் மக்கள் அடிப்படை வசதியின்றி தவிப்பு

சண்டிலிப்பாய்,ஜூலை16

வலி.வடக்குப் பிரதேச சபையினால அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கீரிமலைத் தீர்த்தக்கேணிப் புனரமைப்பு வேலைகள் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை என அங்கு சென்று வந்தோர் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தியேட்டிக் கிரியைகளை மேற்கொள்ளுவதற்காக தினமும் பலர் தெல்லிப்பழை இராணுவ சோதனைச் சாவடி ஊடாக இராணுவக் கண்காணிப்புடன் அங்கு சென்றுவருகின்றனர்.

இதேவேளை, தென்னிலங்கையில் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகளும் தினமும் கீரிமலைத் தீர்த்தக்கரைக்கு வந்து செல்கின்றனர். இவர்கள் இயற்கைக்கடன்களைக் கழிப்பதற்கு இங்கு மலசலகூட வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை.

இதன் காரணமாக தீர்த்தக்கரைப பகுதியில் - கேணி சுற்றாடலில் துர்நாற்றம் வீசுவதாகவும், சுற்றாடல் சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அங்கு சென்றுவந்தவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தீர்த்தக்கேணி துப்புரவு செய்யப்படாமல் சேறும், சகதியுமாய்க் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கி உதவியாளர் பரீட்சை சித்தியடைந்தோர் விவரம்

## மற்றொரு தேர்வு ஜூலை 21இல்

யாழ்ப்பாணம்,ஜூலை16

கடந்த மாதம் 16ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வங்கி உதவியாளர் பரீட்சையில் சித்திய டைந்த 66 பேருக்கும் மற்றுமொரு பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள் ளவர்களின் பெயர்களும் சுட்டெண் களும் வருமாறு:-

செல்வி அகல்யா.எஸ். (321), ஆர்.எம்.அந்தோனிப்பிள்ளை (327), செல்வி எஸ்.அனுசா (328), செல்வி ஜி.அனுசா (329), செல்வி எஸ். ஆரணி (330), செல்வி என்.அருணகிரிராஜா (333), எஸ்.எஸ்.பகீரதன் (337), செல்வி எஸ்.பகீரதி (338), செல்வி பி.பால கிருஷ்ணன் (343), செல்வி பி.பாலசுப் பிரமணியம் (345), செல்வி ஜி.பால சுப்பிரமணியம் (346), ரி.எழில்மேனன் (355), ஜி.கஜமுகன் (357), செல்வி கனேஸ்வரன் (363), கே.கோபிநாத் (365), பி.ஹரிஹரேந்திரா (369), ஜி. ஹரின்ஆர்க (370), ஆர்.இளங்குமரன் (371), என்.ஜெயமோகன் (374), எஸ். ஜேரோன் (376),. செல்வி எவ்.எக்ஸ். ஜெயச்சந்திரா (377), செல்வி வி. ஜெயகுமாரி (378), செல்வி ஜே.ஜெய ரெட்ணம் (379), செல்வி பி.கைலாசபதி (382), கே.கஜன் (383), செலவி ஆர். கமலமீரா (386), செல்வி ஆர்.கமசலா (388), செல்வி எஸ்.கனகலிங்கம் (389), எஸ்.கணநாதன் (395), செல்வி எஸ்.கணபதிப்பிள்ளை (396), செல்வி என்.கந்தசாமி (398), எ.எ.கிஷான் (410), செல்வி என்.கோகுலதாஸ் (412), எஸ்.கோகுலகாந்த் (413), எஸ். கிருஷ்ணகுமாரன் (415), திருமதி வி. குமாரன் (420), ஈ.மகேந்திரன் (429), செல்வி எம்.மகேந்திரன் (430), செலவி ஜி.மாணிக்கவாசகர் (431), எ.மன்ஜீவன் (432), செல்வி பி.மனோஜ் (434), செல்வி எஸ்.சிவன்தா (440), ஆர்.முரளிதரன் (441), பி.முருகதாஸ் (442), செல்வி ஜெ.முத்துக்குமாரி (443), செல்வி எஸ்.நடராஜா (445), செல்வி ஜி.நாகேந் திரன் (446), செல்வ! வி.நரேந்திரன் (448), செல்வி எம்.நிர்மலா (450), செல்வி ஜி.நிசாந்தி (452), எஸ்.பகீர தன் (453), செல்வி வி.பரமநாதன் (459), செல்வி ஆர்.பராபரன் (460), ஆர்.றோகர் (494), செல்வி எம்.சதாசிவ சர்மா (503), செல்வி எம்.செபஸ்ரியாம் பிள்ளை (505), பி.சீராளன் (506), செல்வி எஸ்.செந்தில்நாதன் (513), செல்வி எஸ் சின்னத்தம்பி (519), எஸ்.சிவநாதன் (531), செல்வி எஸ்.சிவராஜா (533), செல்வி எம்.சிறிதரன் (540), எவ்.சுதா கரன் (550), எம்.தனேஸ் (561), பி.தர் மேந்திரா (564), என்.உதயசாகர் (585).

மேற்படி பரீட்சார்த்திகள் தமது பரீட்சை அனுமதி அட்டைகளை நாளை புதன்கிழமை யாழ். கன்னா திட்டியில் உள்ள மக்கள் வங்கி பிரதேச தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளும்படியும் அறிவிக்கப்பட்டுள் ளது.

(ஒ)

# நீலங்காடு பகுதி மக்கள் மீளக்குடியமர கோரிக்கை

மூளாய்,ஜூலை16

காரைநகர் நீலங்காடு கிராம மக் கள் தமது சொந்த இடத்தில் மீளக் குடியமர்வதற்கு அனுமதி கோரியுள்ள னர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக நீலங்காடு கிராம அபிவிருத்திச் சங் கம் ஊர்காவற்றுறை பிரதேச செய லரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள் ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்ட தாவது:-

எமது நீலங்காடு கிராமத்தில் இருந்து 1990ஆம் ஆண்டு அசம்பா விதம் காரணமாக இடம்பெயர்ந்து பல இடங்களில் எம்மக்கள் வாழ் கின்றார்கள். தற்போதைய சமாதான யுத்தநிறுத்த வேளையில் எமது கிராமத்தைச் சேர்ந்த சுமார் 50 குடும் பங்களை மீண்டும் அக்கிராமத்தில் பாதுகாப்புடன் மீளக்குடியமர்த்து வதற்கு அனுமதி பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- என்றுள்ளது.

### இந்தவார இறுதியில்

# யாழ்.நூலகத்துக்கான நூல்கள் எடுத்துவரப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை16

தற்பொழுது புனரமைக்கப்பட்டு வருகின்ற யாழ்.பொதுநூலகத்துக் கான ஒருதொகுதி நூல்கள் கொழும் பிலிருந்து இந்தவார இறுதியில் இங்கு எடுத்துவரப்படவுள்ளன.

இந்தியா உட்படப் பல்வேறு நாடு களினால் வழங்கப்பட்ட இந்த நூல் கள் யாவும் தற்பொழுது கொழும்பில் உள்ள புனர்வாழ்வு அமைச்சின் அலு வலகத்தில் உள்ளதாகவும் -

இந்தவார இறுதியில் அவை இங்கு எடுத்துவரப்படவுள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

நூலகப் புனரமைப்புப் பணிக்கென 50 லட்சம் ரூபா பணத்தை புனர் வாழ்வு அமைச்சின் நிதியில் இருந்து வழங்குவதாக புனர்வாழ்வு, அகதி கள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜெய லத் ஜயவர்த்தனா உறுதியளித்துள் ளதாக யாழ்.மாநகர முதல்வர் தெரி வித்துள்ளார்.

(ஒ-10)

# கல்வியியற் கல்லூரி பட்டதாரிகளில் ஆசிரிய நியமனம் பெற்றவர் விவரம்

திருகோணமலை,ஜூலை16

கல்வியியற் கல்லூரியில் டிப் ளோமா பட்டம் பெற்று வெளியேறிய வர்களில் யாழ்.மாவட்ட பாடசாலை களுக்கு ஆசிரிய நியமனம் வழங் கப்பட்டோரின். பெயர் விவரம் வரு மாறு:-

எஸ்.பரிமளம்(மூளாய்), ரி.அனு சுயா(பண்ணாகம்), கே.மகிழினி(254, பிறவுண் வீதி, யாழ்.), எஸ்.ஜோதை (மடத்தடி, மட்டுவில் தெற்கு), ஆர். சிவமணி(செம்பியன்பற்று), பி.சிவதர் சினி(நெல்லியடி).

கே.சத்தியவாணி (இணுவில் மேற்கு), சி.தமிழ்ச்செல்வி (நெல்லியடி), எஸ்.காயத்திரி (சாவகச்சேரி), கே. ஞானேஸ்வரி (சுழிபுரம்), வீ.ஜீவலட் சுமி (நீர்வேலி மேற்கு).

ஆர்.கிரகபதி(செம்பியன்பற்று), கே.சபாளினி(திருநெல்வேலி கிழக்கு), வி.துஸ்யந்தி(அச்செழு), ரி.பாமினி (தும்பளை மேற்கு), வி.சுபத்திரா (மாவிட்டபுரம்).

எஸ்.உதயசெல்வி(திருநெல்வேலி கிழக்கு), கே.நளாயினி(111, பொஞ் சீன் வீதி, கொழும்பு), கே.சுதாகரன் (பண்டாரிக்குளம், வவுனியா), எஸ். முகுந்தன்(இணுவில் தெற்கு), என். கஜேந்திரன்(அச்சுவேலி வடக்கு), ஆர்.இராஜமுகுந்தன்(வட்டு.கிழக்கு), ரி.கிருஷ்ணதாஸ்(இராமநாதன் வீதி, யாழ்.), என்.தாரணி(தும்பளை, பருத் தித்துறை), எல்.மதனி(சண்டிலிப்பாய்), எஸ்.வினோதினி(வட்டு.கிழக்கு), கே.எஸ். சண்முகரூபன்(அல்வாய் வடமேற்கு), எட்வின் சுமத்திரா(அளவெட்டி).

எம்.ஜனனி(யாழ்ப்பாணம்), ஆர். ராதிகா(வேலணை மேற்கு), வி.சிவ கௌரி(இடைக்காடு).

வவுனியா மாவட்டத்திற்கு நிய மனம் செய்யப்பட்டோர் விவரம்:-

ரி.வஜந்திமாலா(வேப்பங்குளம்), எஸ்.அமிர்தவர்ஷினி(மாறம்பைக்குளம்), எஸ்.கல்பனா(வவுனியா), வி.காந்திமதி (68/4, பூந்தோட்டம், வவுனியா), பி. நகுலேஸ்வரி(வேப்பங்குளம்), எஸ்.சந் திரலோகி(மாறம்பைக்குளம்), எஸ். வனிதா(வேப்பங்குளம்).

எஸ்.சிவநந்தினி(குருமன்காடு, வவுனியா), ஆர்.பிறேம்குமார்(78, வெலிக்குளம், வவுனியா), கே.கெங் காதரகீர்த்தி(59, றம்பைக்குளம்), கே. பாஸ்கரன்(617/3, ஆலடி வீதி, தோணிக கல்), சி.சகீதரன்(78, வெலிக்குளம், வவுனியா), எஸ்.ரஞ்சித்(றம்பைக்குளம்).

எஸ்.பாலதர்ஷினி(பண்டாரிக்குளம்), எஸ்.சுதர்சினி(கட்டைத்திணைக்களம், வவுனியா), என்.கேமலதா(பூங்கா வீதி, வவுனியா), எஸ்.துஷ்யந்தன் (மன்னார் வீதி, வவுனியா), எஸ்.பால முரளி(பூந்தோட்டம், வவுனியா), கே. தனுஷா(குருமன்காடு).

முல்லைத்தீவிற்கு நியமிக்கப்பட் டோர் விவரம்:-

எ.மணிமேகலா(செம்மலை, அலம் பில்), எஸ்.ஜெயந்தன்(வவுனிக்குளம்), எஸ்.சிவகரன்((முல்லைத்தீவு), எஸ். சிவகெங்கை(ஒட்டிசுட்டான்).

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நிய மனம் பெற்றோர் விவரம்:-

என்.நகுலேஸ்வரி(இயக்கச்சி), எஸ்.ரேகா(வன்னேரி). (ஒ-290-ரி)

# புத்தளத்தில் மௌலவி கடத்தப்பட்டு தாக்கு!

புத்தளம்,ஜூலை16

புத்தளம், சவீவபுரம் குடியேற்றத் திட்டத்திலுள்ள 'மஸ்ஜிதுன் ரஹ்மான்' பள்ளி வாசலின் பேஷ் இமாம் அப் துல் லத்தீப் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டார். இத்தாக்குதலை அடுத்து தனது சொந்த ஊரான விரு தோடைக்கு அவர் சென்றுவிட்டார் எனத் தெரிகிறது.

கடந்த வெள்ளியன்று இவர் மோட் டார் சைக்கிளில் வந்தோரால் கடத் தப்பட்டார். ஆள்நடமாட்டமற்ற இட மொன்றில் வைத்து பொல்லினால் கடு மையாகத் தாக்கப்பட்டார். பின்னர் கழுத்தில் கத்தியை வைத்துக் கொலை செய்யப்படுவார் என்று பய முறுத்தப்பட்டாராம்.

பலத்த தாககுதலுக்குப்பின் உட னடியாகப் புத்தளம் நகரைவிட்டு வெளியேறிவிடவேண்டுமென்று கடத் தியோர் மிரட்டினராம். அதையடுத்து மௌலவி அப்துல் லத்தீப் விருதோ டைக்குச் சென்றுவிட்டாராம்.

என்ன நோக்கத்திற்காக இவர் கடத்தப்பட்டார் என்பது இதுவரை தெரியவில்லை. இச்சம்பவம் குறித்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து ஏனைய மௌலவிமார்கள் ஆலோசித்து வருகின்றனர்.

(ஒ)

### இந்து கலாசார அமைச்சின்

# கலாபூஷணம் விருதுக்கு தெரிவானோர் பட்டியல்

யாழ்ப்பாணம்,ஜூலை16

இந்து கலாசார அமைச்சின் 2001ஆம் ஆண்டுக்கான 'கலாபூஷணம்' விருது பெறுவதற்கு யாழ். மாவட்டத் தில் இருந்து 16பேர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்டுள்ள 16 பேரின் பெயர் விவரங்கள வருமாறு:-

அப்பாப்பிள்ளை ஆறுமுகம் (கலை - மல்லாகம்), ஏ.கே.ஏரம்பமூர்த்தி (கர்நாடக சங்கீதம் - மீசாலை), திரு மதி தர்மாவதி குமாரசுந்தரம் (கர்நாடக சங்கீதம் - மாவிட்டபுரம்), திருமதி சரஸ்வதி கோபாலசுவாமி (கர்நாடக சங்கீதம் - பன்னாலை), செல்வா பொன்னுத்துரை (கர்நாடக சங்கீதம் (வாய்ப்பாட்டு) - அரியாலை மேற்கு)-

பொன்னுச்சாமி சுப்புசாமி (நாதஸ வரம் - நல்லூர்), பெரியசாமி பிச்சை யப்பா (நாதஸ்வரம் - யாழ்ப்பாணம்), ஆறுமுகம் கந்தையா நடராஜா (ஓவியம் - வியாபாரிமூலை), மரியம் பிள்ளை பிலோமின் (நாடகம் - யாழ்ப் பாணம்), ஆறாலியூர் ந.சுந்தரம்பிள்ளை (நாடகம் - நீராவியடி, யாழ்.), வைர முத்து வாமதேவன் (நாடகமும் சினி மாவும் - யாழ்ப்பாணம்), அப்புத்துரை வென்செஸ்லோஸ் அரியநாயகம் (நாடகம் - நெடுந்தீவு) -

கதிர்காமு இரத்தினம் (நாடகம் - அரியாலை), ஆன்சி அருளப்பு (கிரா மியப் பாடல்களும் நடனமும் - அரி யாலை), வைரவப்பிள்ளை செல்லையா (இலக்கியம் - யாழ்ப்பாணம்), செல்லத் தம்பி மாணிக்கவாசகம் (ஊடகவியல் - யாழ்ப்பாணம்).

விருது வழங்கும் விழாவுக்கான திகதி மற்றும் இடம் என்பன பின்னர் அறிவிக்கப்படும் என்று அமைச்சு அலுவலக வட்டாரங்கள் தெரிவித் தன.

(ஒ-10)

# காரைநகரில் நாளை புலிகளுக்கு வரவேற்பு

காரைநகர்,ஜூலை16

காரைநகரில் தமது அரசியல் பணிகளை மேற்கொள்வதற்காக வருகைதரவுள்ள விடுதலைப் புலி களுக்கான வரவேற்பு விழா நாளை புதன்கிழமை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காரைநகரில் உள்ள பொது அமைப்புகள் இணைந்து இந்த வர வேற்பு விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

நாளை புதன்கிழமை காலை 10 மணியளவில் காரைநகர் வலந்த லைச் சந்தியில் இருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களி னால் விடுதலைப் புலிகளின் அரசி யல் பணிக்குழுவினர் அழைத்து வரப்படுவர்.

தொடர்ந்து வரவேற்பு விழா யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெறும்.

அன்றையதினம் மாலை சமாதா னச் சூழலை வலியுறுத்தும் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

(எ-73)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை16

இளவாலை புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ளது.

இன்று முதல் தினமும் மாலை 6 மணிக்கு திருச்செபமாலையும் திருப்பலியும் இடம்பெறும்.

எதிர்வரும் 24ஆம் திகதி புதன் கிழமை மாலை 6மணிக்கு நற்கருணை விழாவும் 25ஆம் திகதி வியாழக் கிழமை காலை 7மணிக்கு திருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும். (எ-8)

★ ★ ★

சுருவில் ஸ்ரீஹரிஹர புத்திர ஐய னார் ஆலயத்தின் வருடாந்த அலங் காரத் திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு அபிஷேக ஆரா தனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது. (எ)

# பதவியேற்பும் சின்னஞ்சூட்டுதலும்

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ். றோட்டறிக் கழகத்தின் இடைநிலைக் கழகமான நல்லூர் றோட்டரக்ட் கழகத்தின் இரண்டா வது வருடப் பதவியேற்பும், சின்னஞ் சூட்டும் விழாவும் நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஓட்டு மடம் தேவாலயத்தில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். றோட்டறிக் கழகத்தின் உப-தலைவர் என்.வன் னியசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(எ)

## வீதிகள் திருத்தும் பணி ஆரம்பம்

தென்மராட்சி,ஜூலை16

சாவகச்சேரி பிரதேச சபை எல் லைக்குட்பட்ட பகுதிகளில் பற்றைக் காடாகக் காணப்பட்ட வீதிகளும் ஒழுங் கைகளும் பிரதேச சபை ஊழியர்க ளால் தற்போது திருத்தப்பட்டு வரு கின்றன.

அரசின் 100 நாள் வேலைத்திட் டத்தின்கீழ் கச்சாய், சரசாலை, கைதடி ஆகிய உபஅலுவலக எல்லைகளுக் குட்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகள் துப்புரவு செய்யப்பட்டு, தற்போது நாவற்குழி உபஅலுவலக எல்லைக் குட்பட்ட பகுதிகளில் துப்பரவுப்பணி கள் நடைபெற்றுவருவதாக பிரதேச சபைச் செயலாளர் உ.ந.பாலச்சந்தி ரன் தெரிவித்தார். - (எ-117)


## பதவி வெற்றிடம்

✷ உழவு இயந்திர சாரதி ~

வேலணை கமநல சேவை நிலையத்து நான்கு சில்லு உழவு இயந்திர சாரதி பதவிக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமை - 8ஆம் தரம் சித்தி

வயது - 25 - 55 வரை

✪ சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவேண்டும்.

*விண்ணப்ப முடிவு திகதி - 30.07.2002*

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

பெரும்பாக உத்தியோகத்தர்,

கமநல சேவை நிலையம், வேலணை.

(6044)



## மீண்டும் தென்மராட்சியில்!

றெனி மூக்குக்கண்ணாடி அகம்

அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் தென்மராட்சியில் எமது ஸ்தாபனம் நேற்று (15.07.2002) திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

☆ கண்களைப் பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள...

☆ மிதப்புப் பற்களுக்கு 'கிளிப்' போட்டுக்கொள்ள....

☆ உறுதியான பற்களை முக அமைப்புக்கேற்ப கட்டிக்கொள்ள

றெனி மூக்குக் கண்ணாடி அகம்

கடை வீதி, சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக் கட்டடங்களில் இருந்து
# படையினர் வெளியேறாததால் உசன் ம.வி. மாணவர் சிரமம்

தென்மராட்சி,ஜூலை16

உசன் இராமநாதன் மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு கட்டடங்கள், விளையாட்டு மைதானம் மற்றும் பிரதான நுழைவாசல் ஆகியவற்றில் படையினர் தொடர்ந்து நிலைகொண்டுள்ளதால் வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

வித்தியாலய பிரதான நுழைவாசல் ஊடாக மாணவர்கள், ஆசிரியர்கள் செல்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதால் 200 மீற்றருக்கு நடந்து சென்று உசன் கந்தசாமி கோயில் ஊடாகவே வித்தியாலத்திற்குள் செல்லவேண்டியுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நான்கு மாதங்களாகியும் படையினர் இவ்வித்தியாலயத்திலிருந்து வெளியேறாதது யுத்தநிறுத்த மீறல்களில் ஒன்றாகிறது என்றும் -

எனவே வித்தியாலயத்தில் நிலைகொண்டுள்ள படையினரை உடனடியாக அங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் -

உசன் இராமநாதன் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் மகஜர்மூலம் கோரியுள்ளனர்.(எ-117)

### தங்கச் சங்கிலி அபகரிப்பு

கடமை முடிந்து வீட்டுக்கு மோட்டார்சைக்கிளில் சென்ற பெண்ணை சைக்கிளால் மோதி வீழ்த்திவிட்டு அவர் அணிந்திருந்த தங்கச்சங்கிலி மற்றும் காப்புகள் ஆகியவற்றை அபகரித்துச் சென்ற சம்பவம் நேற்றுமுன்தினம் பட்டப்பகலில் நுணாவில், கல்வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சனநடமாட்டமில்லாத பகுதியில் வைத்தே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (எ-117)


### ஆனந்தஜோதி வைத்தியசாலை

(சாவகச்சேரி)

மேற்படி வைத்தியசாலை கென்ஸ்மன் லேன் சாவகச்சேரியில் மீண்டும் செவ்வாய், வெள்ளி, சனி காலை 8.00 மணிமுதல் 12.00மணிவரை இயங்குகின்றது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(6052) Dr.வ.சின்னப்பு.


### நிர்வாகத் தெரிவுக் கூட்ட அறிவித்தல்

இராமநாதன் நுண்கலைத்துறை கவின்கலைமன்றத்தின் நிர்வாகத் தெரிவுக்கூட்டம் நாளை (17.07.2002) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு இசைத்துறை அறிமுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து மாணவர்களையும் இக்கூட்டத்துக்குத் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர்,
கவின்கலை மன்றம்,
இராமநாதன் நுண்கலைத்துறை.

*யாழ். பல்கலைக்கழகம்.*

(6048)

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ!

### புங்குடுதீவு மேற்கு 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மகாசபைக் கூட்ட அறிவித்தல்

அடியார்களே!

மேற்படி ஆலய புனருத்தாரண திருப்பணி வேலைகள் செய்யவேண்டியிருப்பதால் அதிகாரங்கள்கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்படவேண்டும். அதன் காரணமாக எதிர்வரும் (21.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு (புதியநேரம்) ஆலய முன்றிலில் மகாசபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

ஆகவே அடியார்கள் அனைவரும் உரிய நேரத்துக்கே தவறாது கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

(6053) - இடைக்கால பரிபாலன சபை.

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 08 - 1921



மறைவு 07 - 08 - 2000

காச்யபகோத்திரம்

இலக்கியகலாநிதி. வாழ்நாள்பேராசிரியர்

**கலாநிதி பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்கள்**

*சிராத்த திதி: 17.07.2002*

அன்னாரின் ஆத்மசாந்திக்காக நாளை (17.07.2002) புதன்கிழமை ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமிக்கு சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னநாத சுவாமிக்கும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

*சிவன் கோயில், நல்லூர்.*

ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தானம்,
வாழ்நாள்பேராசிரியர் பிரம்மஸ்ரீ
கா.கைலாசநாதக்குருக்கள் ஞாபகார்த்த
சபை/ஆராய்ச்சி நிலையம், நியந்தா.

(6055)

### முக்கிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை16

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சனசமூக நிலைய நிர்வாகிகள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன் கிழமை மாலை 3மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முக்கிய பல விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் வலிகாமம் கிழக்கு அரசியல்துறையினர் கேட்டுள்ளனர்.

(ம-9)

### ஊர்காவற்றுறை கடற்றொழில் குழுக்கூட்டம்

ஊர்காவற்றுறை,ஜூலை16

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதேச கடற்றொழில் குழுக்கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(எ-16)

### ஒப்பந்தத்தை....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ பல வீதிகள் இன்னும் மக்கள் பயன்படுத்த திறந்துவிடப்படவில்லை.

★ இப்பிரதேசத்தின் பிரதான வளமான பனைவளம் கண்மூடித்தனமாகத் தொடர்ந்தும் அழிக்கப்பட்டு வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக நாம் ஏற்கனவே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்து ஜூலை 10ஆம் திகதி சாதகமான பதிலை எதிர்பார்த்தோம். எனினும் உறுதியான முடிவு எதுவும் கிடைக்கவில்லை.

எனவேதான், மேற்காட்டிய ஒப்பந்த மீறல்களை ஆராய்ந்து அவற்றை உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து, இப்பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பது, தென்மராட்சிப் பிரதேசத்தின் அரச செயலராகிய உங்களைச் சார்ந்ததாகும். சாதகமான பதிலை தங்களிடமிருந்து எதிர்பார்த்து நிற்கின்றோம்.

சாதகமான பதில் கிடைக்காதவிடத்து, இப்பிரதேச மக்கள் தமது இயல்பு வாழ்க்கையைப் பெறத் தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லாமல் இருக்கும்.

(ம-8-31)


### தேவை

மில் வேலைகளில் அனுபவமுள்ளவர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 119, கண்டி வீதி (பெந்தகோஸ் சபையருகில்), யாழ்ப்பாணம்.

(6050)

**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று மட்டும்

சூர்யா, லைலா, ராஜ்கிரண் நடித்த

**நந்தா** (சீஸ்)

11.00, 3.00 மணி காட்சிகள்

நாளைமுதல்

**மனதைத் திருடிவிட்டாய்**

(6039)

**ராஜா** யாழ்ப்பாணம்.

அஜித், ஜோதிகா, வடிவேல், ராதாரவி நடித்த

**ராஜா**

தினசரி 10.30, 2.30, 5.30

(C/22753)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ரஜனி, சிவாஜி, சௌந்தர்யா நடித்த

காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)

(C-22944)


## பேரணியில் இடம்பெற்ற கோஷங்களில் சில...

யாழ்ப்பாணம்,ஜூலை16

நேற்றைய பேரணியில் கலந்து கொண்ட பொதுமக்கள் எழுப்பிய கோஷங்கள் சில வருமாறு:-

★ சிங்கள அரசே எமது வீடுகளில் நாம் சுதந்திரமாக மீளக்குடியமர அனுமதி.

★ சிங்கள அரசே எமது பாடசாலைகள், வீடுகள், வணக்கஸ்தலங்களில் இருந்து விரைவாக வெளியேறு.

★ அரசே எமது மீனவரின் வயிற்றில் அடிக்காதே.

★ அரசே எமது விவசாயிகளை சுதந்திரமாக விவசாயம் செய்ய விடு.

★ எமது வயல் நிலங்கள் உனது விளையாட்டு மைதானமா?

★ எமது பாடசாலைகள் உனது ஆயுதக் களஞ்சியமா?

★ எமது கோவில்கள் உனது கூடாரமா?

★ எமது பனை வளத்தை அழிப்பதை உடனடியாக நிறுத்து.

★ புரிந்துணர்வு உடன்படிக்கையை மதித்து நட.

★ அதில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை விரைவாக நடைமுறைப் படுத்து.

(ம-8)

### கண்ணீர் அஞ்சலி

எமது நிலைய குழு லிகிதராகக் கடமையாற்றிய

திரு.வே.பி.சண்முகநாதன் அவர்களின் அன்புத் தந்தையார்

**வேலர் பிள்ளையார்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

கமநல சேவை குழு
உறுப்பினர்களும் நிலைய
உத்தியோகத்தர்களும்.

*கமநல சேவைகள் நிலையம், வேலணை.* (6047)

## மரண அறிவித்தல்கள்

### வயிரமுத்து குமாரசாமி

பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரமுத்து குமாரசாமி நேற்று (15.07.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் தனலட்சுமி (பிரான்ஸ்), சந்திரகுமாரி (ஜேர்மனி), கமலேஸ்வரி (சுவிஸ்), ஸ்ரீரங்கநாதன் (இத்தாலி), நவநீதம் (பிரான்ஸ்), ரவிக்குமார் (இத்தாலி), மகேஸ்வரன் (லண்டன்), சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருளம்பலம் (லண்டன்), சிவலிங்கராசா (ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (சுவிஸ்), சுயனி (இத்தாலி), சிவரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபிநாத், குருநாத், நிரூசன், சாலிஷன், காயத்திரி, சந்தியா, விதூஜன், விபூசணன், அபிலாஸ் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் மற்றும் செல்வநாயகம், சற்குணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2002) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு, நீர்வேலி.* (6049)

தகவல்: கு.கருணாநிதி (மைத்துனர்)

### செபஸ்தியாம்பிள்ளை யோசவ் தியோபிலஸ்

**(இளைப்பாறிய உதவி தொழில்நுட்பவியலாளர், வீடமைப்புத் திணைக்களம்)**

14.07.2002 ஞாயிற்றுக்கிழமை அன்று செபஸ்தியாம்பிள்ளை யோசவ் தியோபிலஸ் அவர்கள் யாழ்ப்பாணத்தில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற M.செபஸ்தியாம்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற A.அந்தோனிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி றீற்றா தியோபிலஸின் (இளைப்பாறிய ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர்மடம்) அன்புக் கணவரும் கிறிஷா, யூடி, றுக்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் டனி, பாக்கியராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் செயோன், லக்ஷ்மி, அஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற அன்ரனி பிரான்சிஸ் மற்றும் மரியதாஸ், றீற்றா, ஜோர்ஜினா, அஞ்சலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் V.M.அன்ரனிப்பிள்ளை, S.W.விமலதாஸ், S.யேசுதாசன், அரியமணி, எலிசபேத் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2002) புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு (புதியநேரம்) அவரின் சகோதரர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*98/2, மவுண்ட்கார்மெல் றோட், யாழ்ப்பாணம்.* (6056)

தகவல்: **T.றுக்ஷன் (மகன்)**

### நாகலிங்கம் கந்தசாமி

**(ரைக்ரர் உரிமையாளர்)**

அரியாலை, முள்ளி வீதியைச் சேர்ந்த நாகலிங்கம் கந்தசாமி நேற்று (15.07.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வனும் குஞ்சராம்பாளின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - முத்தம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் செல்வராசா (யா/சென்.ஜேம்ஸ் ம.வி.), பாக்கியநாதன், தங்கரத்தினம், பத்மாவதி, சந்திராதேவி (லண்டன்), புனிதவதி (கனடா), சித்திரா (கனடா), சுகந்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் லஜிந்தன் (மாணவன் - யா/மத்திய கல்லூரி), றெனோஜா (மாணவி - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தனுஜன் (மாணவன் - யா/மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் புவனேந்திரன் (சுவிஸ்), தர்மலிங்கம், நித்தியானந்தன் (லண்டன்), பாலையா (கனடா), ஸ்ரீகாந்தரூபன் (கனடா), திருச்செல்வம் (லண்டன்), பத்மினி, புஸ்பவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2002) செவ்வாய்க் கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*445, கண்டி வீதி, அரியாலை (தபாற்கட்டைச் சந்திக்கு அருகில்).* (6057)

தகவல்: **குஞ்சராம்பாள் (மனைவி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுப் பதிவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னாருக்கு வடக்கேயுள்ள பேய் முனையை நோக்கிச் சென்றது. கடற்படையால் வழிமறிக்கப்பட்ட மற்றைய படகு 'ஆர்.எம்.எஸ். 512' என்ற இந்தியப் பதிவையும் 'மீனாட்சி' என்ற பெயரையும் கொண்டிருந்தது.

கடற்படையால் வழிமறிக்கப்பட்ட சமயம் ட்றோலரில் இருந்தவர்கள் தங்களைப் புலிகள் உறுப்பினர்கள் என்று அடையாளம் காட்டியதால் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து இரு கண்காணிப்பாளர்கள் வந்து ட்றோலரைச் சோதிப்பதற்காக அதில் ஏறினர்.

கண்காணிப்பாளர்கள் இருவர் மற்றும் கடற்படையினர் இருவரால் ட்றோலர் சோதனை செய்யப்பட்ட பின்னர், அந்த ட்றோலர் வெளிநாட்டுப் பதிவில் இருந்ததால் வழமையான நடைமுறைப்படி மேல் நடவடிக்கைக்காக அதனைக் காவலோடு காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்வதற்கான இணக்கம் கண்காணிப்புக் குழுவினரிடமிருந்து பெறப்பட்டது.

ஆனால், அந்தப் பகுதிக்கு சிரேஷ்ட புலிகள் உறுப்பினர் ஒருவரை ஏற்றி வந்த படகுமூலம் ட்றோலரில் இருந்த புலிகள் உறுப்பினர்கள் செல்வதறகு அனும்தி வழங்கப்பட்ட பின்னரும் கூட, அந்த முடிவுக்கு இணங்க புலிகள் மறுத்தனர்.

கண்காணிப்புக் குழுவினருக்கும் புலிகளின் தலைமைத்துவத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் தொடர்ந்து கொண்டிருந்தபோது - கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும், கடற்படையினரும் ட்றோலரில் இருக்கத்தக்கதாக - அது திடீரெனக் கரையை நோக்கி நகரத் தொடங்கியது.

ட்றோலரின் நகர்வைத் தடுத்து அதிலிருந்த கடற்படையினரை மீட்பதில் கடற்படையால் வெற்றிகாண முடிந்தது. என்றாலும், கடற்கண்காணிப்பாளர்களை ட்றோலரில் இருந்து இறங்கவிடாமல் புலிகள் உறுப்பினர்கள் அவர்களை உடல் ரீதியாகத் தடுத்தனர். எனவே கண்காணிப்புக் குழுவினர் புலிகளின் கைகளில் பணயக் கைதிகளாகினர். இது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 3.9 ஆவது சரத்தை மீறும் செயலாகும்.

ஜூலை 14ஆம் திகதி, தான் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் "கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் இருவரும் அவர்களது விருப்புக்கு மாறாக புலிகள் உறுப்பினர்களால் தடுத்து வைக்கப்பட்டதோடு ட்றோலரை விட்டு வெளியேற விடாது உடல் ரீதியாகத் தடுக்கப்பட்டனர்" - என்று கண்காணிப்புக் குழு தெளிவுபடுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரோன்ட் புருகோவிட் "இது யுத்த நிறுத்த உடன்பாட்டைப் பாரதூரமாக மீறிய விடயமாகும். அத்தோடு புலிகள் மீது கண்காணிப்புக் குழு வைத்திருந்த நம்பிக்கைக்குப் பேரிடியாகவும் அது அமைந்தது" - என்று தெரிவித்திருக்கின்றார்.

அதேசமயம், புலிகளால் பயன்படுத்தப்படும் ட்றோலர் குறித்து தகவல்களைப் பெற்றுத்தருமாறு கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தை அரசு கேட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து அதிக சிரத்தை எடுத்துள்ள அரசு, இலங்கையின் இறையாண்மைக்கு உட்பட கடற்பிரதேசத்தில் சட்டவிரோதமான ஊடுருவல்களைத் தடுப்பதற்காக கண்காணிப்பு மற்றும் ரோந்துகளைத் தீவிரப்படுத்தும்படி கடற்படையைப் பணித்துள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அனைத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுள்ளது. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலைகள் குறித்தும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேவையற்ற விதத்தில் பழிவாங்கப்படுவது குறித்தும் உடனடியாக ஆராயப்படவேண்டி உள்ளதாக அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ம)

# சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
233ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பீ.ஆர்.எல்.அன்ரனீஸ் ஆகியோரும் விடுதலைப் புலிகளின் சார்பில் சிறப்பு அரசியற் பொறுப்பாளர் சி.கரிகாலன், மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் சி.விசு, துணை அரசியற் பொறுப்பாளர் கா.துரை, மட்டு.-அம்பாறை மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் எஸ்.சுபி ஆகியோரும் கலந்துகொணடனர்.

கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலி சாஹிர் மௌலானா, மதகுருமார்கள் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

பாதைத் திறப்பைத் தொடர்ந்து படையதிகாரிகள், புலிகள், அரச அதிகாரிகள், பொதுமக்கள் போன்றோர் செங்கலடியிலிருந்து பெரிய புல்லுமலை வரை பயணம் செய்தனர்.

மட்டக்களப்பிலிலிருந்து பதுளை, பிபிலை, பெரிய புல்லுமலை போன்ற பகுதிகளுக்கு பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபட்டன.

இந்நிகழ்ச்சிகளில் புலிகளின் கிழக்கு மாகாண அரசியல் பொறுப்பாளர் சி.கரிகாலன் உரையாற்றினார்.

அவர் கூறியதாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கையினால் இப்பாதை திறக்கப்பட்டுள்ளது. அரசு நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வீதிப் போக்குவரத்துத் தடைகளை நீக்கியுள்ளது. ஆலயம், பாடசாலைகளில் இருந்து படையினர் வெளியேறிவருகின்றனர். சமாதானம் தொடர்பாக மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படவேண்டும் என்ற எமது கோரிக்கைக்கு ஏற்ப இந்நிகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்பட்டு சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதே புலிகளின் கோரிக்கையாகும். இப்பாதையால் சகல மக்களும் பிரயாணம் செய்யலாம். முஸ்லிம் மக்கள் வர்த்தகம் செய்யவும் இப்பாதை உதவும்.

கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலி சாஹிர் மௌலானா கூறியதாவது:-

ரணில் - பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் எமது பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படவேண்டுமாயின் எமது பகுதிகளில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க கரிகாலன் செயற்பட்டு வருகிறார். நல்ல செயல்களை சில குட்டிச்சாத்தான்கள் குழப்பப் பார்க்கின்றார்கள். எதிர்க்கட்சி சகாக்கள் வடக்கு, கிழக்கு, தெற்கில் இருந்து இதற்காகச் செயற்பட்டு வருகின்றார்கள்.

நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். கடந்த ஆட்சிக்காலத்தில் யுத்தத்தை சாக்குப் போக்குக் காட்டி அபிவிருத்தியைப் புறக்கணித்து விட்டார்கள். அந்த நிலை இன்று மாறியுள்ளது.

- இவ்வாறு அவர் கூறினார்.

கிழக்கு மாகாண இராணுவத் தளபதி எஸ்.பி.சுனில் தென்னக்கோன பேசுகையில் இப்பாதை திறப்பு மட்டக்களப்பு மக்களின் புதிய சரித்திரமாக அமையும். நாம் புலிகளுடன் ஒத்துழைப்பது போன்று பொதுமக்களும் புலிகளுடன் ஒத்துழைத்து அமைதிக்கு வழிகாணவேண்டும். இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையே நல்ல உறவு ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளோம்.

- என்றார். (ம)


யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
The Jaffna Education Centre
சாந்தி சினிமா முன்பாக (மேல்மாடியில்)
Spoken English, சிங்களம்
எழுத, வாசிக்க, கதைக்க இலகுவான முறையில் கற்பித்தல்.
இத்துடன்
Short Hand Typing
இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவுகள் ஆரம்பம்: நாளை [17.07.2002] புதன்
(6021) நிர்வாகி: இ.லோகநாயகம்


# ஓகஸ்ட் 2க்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டு இருக்கின்றோம். அதற்கு முன்னர் பேச்சுக்கான திகதி, நிகழ்ச்சி நிரல் போன்ற எது பற்றியும் சிந்திக்க முடியாது என்று பாலசிங்கம் கூறிவிட்டார் என்று தெரியவருகிறது.

இரணைதீவுக் கடலில் கடந்த சனிக்கிழமை நடந்த சம்பவம் பற்றியும் பேசப்பட்டது. புலிகள் மீன்பிடியிலும் ஈடுபட்டுவருகிறார்கள். அவர்கள் இந்திய ட்றோலர்களைப் பெற்று மீன்பிடிப்புக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். கடந்த சனிக்கிழமையும் அப்படி இந்தியாவிலிருந்து பெற்ற ட்றோலர்களைக் கொண்டு மீன்பிடித்துக்கொண்டிருந்தபோதே கடற்படையினர் குறுக்கிட்டனர் என அன்ரன் பாலசிங்கம் விளக்கினார் என்று கூறப்படுகிறது.

கண்காணிப்புக் குழுவினர்களை புலிகள் தமது படகில் பணயக் கைதிகளாக வைத்திருக்கவில்லை. அவர்களின் பாதுகாப்பிற்காகவே வைத்திருந்தனர். மாலுமிகள் போல கண்காணிப்புக்குழுவினரும் கடலில் பாய்ந்து கடற்படைக் கப்பலில் ஏற முடியுமா? அவர்களுக்கு உயிராபத்து நேர்ந்தால் என்ன செய்வது? அதை எண்ணித்தான் கண்காணிப்புக் குழுவினரை புலிகள் தமது ட்றோலரில் கொண்டுபோய் கிளிநொச்சியில் பத்திரமாக உரிய இடத்தில் ஒப்படைத்தார்கள் என்றும் பாலசிங்கம் விளக்கமளித்தார் என அறியவருகிறது.

தவிரவும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் புலிகள் கடலைப் பயன்படுத்துவது பற்றி அவ்வளவாக ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, புலிகளின் கடல் நடமாட்டத்திற்கும், மீன்பிடிக்கும் வசதியாக நோர்வேக் குழு இலங்கை அரசுடன் பேசி புதிய ஏற்பாடு ஒன்றை செய்துதரவேண்டும் என அன்ரன் பாலசிங்கம் கேட்டுக் கொண்டார் என்று தெரிகிறது.

அந்த முயற்சியில் ஈடுபட நோர்வேக்குழு சம்மதித்திருப்பதாகவும் தெரிகிறது.

பேச்சு மிகவும் சுமுகமாகவும் சினேகபூர்வமாகவும் நடந்ததாகக் கூறப்பட்டது. (ம)

## வேலணையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீவு, துறையூர் பகுதிகளில் இருந்து வருவோர் டிப்போ சந்தியிலும் -

ஊர்காவற்றுறை, எழுவைதீவு, காரைநகர், சுருவில் பகுதிகளில் இருந்து வருவோர் புளியங்கூடல் சந்தியிலும் -

கிழக்கு வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டியில் இருந்து வருவோர் வங்களாவடிச் சந்தியிலும் -

போராட்டத்தில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான ஒழுங்குகளை தீவக மக்கள் நலன்காப்பகமும், தீவக மாணவர் ஒன்றியமும் மேற்கொண்டுள்ளன.

கடற்படையினரின் அடாவடித்தனங்களைக் கண்டித்து இன்று பிற்பகல் ஒரு மணியளவில் புளியங்கூடல் சந்தியில் இருந்து வங்களாவடியில் உள்ள கண்காணிப்புக் குழுவினரின் அலுவலகம் வரை பேரணி ஒன்றும் இடம்பெறவுள்ளது.

பேரணியின் இறுதியில் தீவக மக்கள் நலன் காப்பகத்தின் சார்பிலும், மாணவர் ஒன்றியத்தின் சார்பிலும் கண்காணிப்புக்குழுவினரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது. மகஜரின் பிரதி ஒன்று கண்காணிப்புக்குழு ஊடாகப் பிரதமருககு அனுப்பப்படும். (ம-ரி)

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்தாலோசனை நடத்தப்படவிருக்கிறது.

இந்தச் சந்திப்பை அடுத்து, வருங்கால அரசியல் நடவடிக்கைகளுக்கான வியூகம் வகுக்கப்படவிருக்கிறது.

ஓகஸ்ட் 2 ஆம் திகதிக்குள் யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களும் நிறைவேற்றப்பட்டு ஆக வேண்டும்.

அரசு இப்போது செயற்பட்டு வரும் வேகத்தில் காரியம் ஒப்பேறும் என்ற நம்பிக்கை இல்லை. வடக்கு - கிழக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை அந்தந்த மாவட்ட எம்.பிக்கள் இந்தச் சந்திப்பின்போது தெளிவுபடுத்துவர்.

பல வணக்க ஸ்தலங்களிலிருந்து படையினர் வெளியேறியுள்ள போதிலும் அவற்றில் சிலவற்றினுள் பொது மக்கள் சென்று வழிபட அனுமதி மறுக்கப்படுகிறது.

பாடசாலைகளின் நிலைமையும் இப்படித்தான். படையினர் வெளியேறிய பாடசாலைகளில் பல இயங்க முடியாத நிலையிலேயே உள்ளன.

பாதுகாப்புவலயத்தினுள் அவை அமைந்திருக்கின்றன என்று காரணம் காட்டி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இவை பற்றிஎல்லாம் சந்திப்பின் போது ஆராயப்படவிருக்கிறது.

சமீபத்தில் நடந்த கலவரங்களை அடுத்து கிழக்கின் இன்றைய நிலைமை எப்படி இருக்கிறது என்பதும் சந்திப்பின்போது ஆராயப்பட்டு தமிழ் - முஸ்லிம் நல்லுறவை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிக்கப்படும்.(ம-12)


தரம் 5 புலமைப் பரிசில் 2002
மாணவர்களே!
விசேட துரித மீட்டல் பயிற்சி வகுப்பு
ஆரம்பம்: 17.07.2002 காலை 8.30மணி.


## தென்மராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருந்து ஆரம்பமாகிய இப்பேரணி 11 மணியளவில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது.

தென்மராட்சியின் பல பாகங்களில் இருந்தும் பொதுமக்கள் பெருமளவில் வந்து பேரணியில் கலந்துகொண்டனர். தென்மராட்சி வர்த்தகர்கள் அனைவரும் தமது வியாபார நிலையங்களைப் பூட்டி இப்பேரணியில் கலந்துகொண்டனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தைப் பேரணி வந்தடைந்ததும் பொது மக்கள் கண்டி வீதியை இடைமறித்து வீதியின் குறுக்கே அமர்ந்து கொண்டனர். இதனால் சுமார் ஒரு மணி நேரம் கண்டி வீதி வழியான போக்குவரத்துத் தடைப்பட்டது.

பின்னர் அங்கு பொதுக் கூட்டம் இடம்பெற்றது. கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி, தென்மராட்சி நலச் சேவைகள் சங்கத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி, தென்மராட்சி மாதர் சங்கத் தலைவி செல்வி வேலாயுதபிள்ளை தங்கரத்தினம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

அவ்வேளையில் கண்டி வீதி வழியாக வந்த இராணுவத்தினரின் டிராக்டர் மற்றும் ட்ரக் என்பன தொடர்ந்து செல்லமுடியாமல் திரும்பிச் சென்றன.

கூட்டம் முடிவுற்றதும் அரசுக்கு அனுப்புவதற்காக தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகஸ்தரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

(ம-8-117-180-31)

## பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்றினால் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

அதன்படி சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் என இனங்காணப்பட்டு பல்கலைக்கழக விசாரணைக் குழுவினால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட 29 பேரின் பெயர் விவரங்கள் துணைவேந்தரால் மன்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

அவர்களில் மூன்று மாணவர்கள் மாத்திரமே நேற்றுவரையும் தமது வாக்கு மூலத்தை யாழ்.பொலீஸாரிடம் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்தே ஏனையவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## தீவகத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புலிகளால் இந்த ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் இன்று அவர்களுடன் இணைந்துகொள்வார்.

இந்த ஆணைக்குழுவினர்,

★ வேலணையில் இடம்பெற்ற சம்பவத்துக்கு யார் காரணம்?

★ இந்தச் சம்பவம் இடம்பெற்றதற்கான காரணம் என்ன?

★ இனிவரும் காலங்களில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன?

★ தீவகத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினருக்கும், படையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையே புரிந்துணர்வையும், நல்லுறவையும் கட்டியெழுப்புவதற்கு அரசு, விடுதலைப் புலிகள், கண்காணிப்புக்குழு ஆகிய முத்தரப்பும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

ஆகிய நான்கு முக்கிய விடயங்கள் குறித்துத் தமது விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இதனால், தீவக சம்பவம் குறிதது அப்பகுதி மக்கள் சாட்சியமளிப்பது மட்டுமன்றி, இத்தகைய சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாமல் இருப்பதற்கான ஆலோசனைகளை பொதுமக்களும், பொது அமைப்புகளும் இந்த விசாரணைகளின்போது வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டின் ஏனைய இடங்களில் இடம்பெறும் ஒப்பந்த மீறல்கள், மற்றும் அவற்றைத் தடுப்பதற்கான ஆலோசனைகள் குறித்தும் விசாரணைக் குழுவினரிடம் பிரஸ்தாபிக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

நான்கு நாள்களுக்கு இந்த விசாரணைகள் இடம்பெறும். காலை 10 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை சாட்சியங்கள் பதிவுசெய்யப்படும். (ம)

# மரண அறிவித்தல்கள்

## கனகர் சரவணமுத்து சிவகுரு

(ஓய்வுபெற்ற R.M.O. மலேரியா தடுப்பு இயக்கம்.
பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி, முல்லைத்தீவு)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் அழகொல்லை, அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் சரவணமுத்து சிவகுரு நேற்று (15.07.2002) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.07.2002 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*93,5.15, Vecerson Coirt*
*Vecerson ane, Colombo-6.*
*T.P.01-599110.* (C/22955)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி நாகமணி ஆசைப்பிள்ளை

நயினாதீவு, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகமணி ஆசைப்பிள்ளை நேற்று (15.07.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமார்வைத்திலிங்கம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற நாகமணியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா, முத்தையா (கனடா) ஆகியோரின் சகோதரியும் புவனேஸ்வரி, முத்துலிங்கம், ஈஸ்வரி (இந்தியா), சிவகாமசுந்தரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நடராசா, இந்திராணி, கி.கதிரவேற்பிள்ளை (இந்தியா), தணிகாசலம் (கனடா) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற சிவகுமாரன், மதிவதனா (ஆசிரியை, நயினாதீவு சிறி கணேஷ் கனிஷ்ட மகா வித்தியாலயம்), நிரஞ்சனா (கனடா), சிவரஞ்சனா (கனடா), நந்தனா, நளாயினி (பிரான்ஸ்), நவரஞ்சினி (நயினாதீவு ஆயுர்வேத வைத்தியசாலை), சுபாஷினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - வேலணை பிரதேச செயலகம்), சக்திவேல் (கனடா), சிவவேல் (இந்தியா), சிவாஜினி (சுவிஸ்), சந்திஜாயினி (இந்தியா), முருகவேல் (இந்தியா), பிரணவன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2002) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெற்றுப், பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லி பரவை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*6ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (C/22956)

தகவல்:
நா.முத்துலிங்கம்
(மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org